www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
1 - 30 ஏப்ரல் '91 6/10 - 11 விலை ரூ.2



ஜெயலலிதா துதிபாடும் பத்திரிகைகள்




## தேர்தல் கமிஷனர்: கட்டுச் சோற்றில் பெருச்சாளி!

படிப்பகம்

www.padippakam.com

# அமைப்புச் செய்திகள்

### மந்திரமா? தந்திரமா?

திருச்சி மக்கள் கலை இலக்கிய கழகம் சார்பாக 15, 16, 17.3.91 ஆகிய மூன்ற நாட்கள் 'மந்திரமா? தந்திரமா?' நிகழ்ச்சி நடத்தப்பட்டது. முதல்நாள் மேலக்கல்கண்டார் கோட்டையில் இலவசமாகவும் மற்ற இரண்டு நாட்கள் புதிய கலாச்சாரம் வளர்ச்சி நிதிக்காக நுழைவுக் கட்டணத்துடன் திருச்சி - ரசிக ரஞ்சன சபாவிலும் நடத்தப்பட்டது. சுமார் 3000 பேர்வரை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளில் சாயிபாபா வெறும் கையில் விபூதி - லட்டு - வாட்ச் வரவழைப்பது, பன்றிமலை சாமியார் நாக்கில்லாத மணியில் ஓசை எழுப்புவது போன்றவையும் வயிற்றைக் கிழித்து குடலை எடுக்கும் மேஜிக் முதலியவையும் செய்து காண்பிக்கப்பட்டு எதுவும் மந்திரமல்ல தந்திரம் தான் என விளக்கப்பட்டது.

### காவிரி நீர் கோரி...

காவிரி நீர் நடுவர்குழு தமிழ்நாடு வருகையை ஒட்டி 23, 24 ஆகிய தேதிகளில் சீகாழி புதிய கலாச்சாரம் வாசகர் வட்டத்தின் சார்பாக நகரின் முக்கிய இடங்களிலும், பனங்காட்டான் குடி, கொண்டல், வள்ளுவக் குடி, கோவில்பத்து ஆகிய கிராமங்களிலும் தெருமுனைப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. காவிரி நீரில் தமிழக மக்களுக்கு உள்ள அனுபோக உரிமையை விளக்கியும், இப்பிரச்சினையில் ஓட்டுக் கட்சிகள் செய்யும் தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்தியும், மத்திய - மாநில அரசுகளை அம்பலப்படுத்தியும் பிரசுரம், தட்டி, சுவரொட்டி வாயிலாகவும் பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது. சுமார் 1000 பேரிடம் கையெழுத்து வாங்கி, நடுவர் குழுவினரிடம் மனு ஒன்றும் கொடுக்கப்பட்டது.

### குடும்ப அட்டை கோரி ஊர்வலம் - ஆர்ப்பாட்டம்

உசிலை வட்டத்தில் ஆரியப்பட்டி, மேட்டுப்பட்டி, மேலப்பட்டி, உச்சப்பட்டி, முண்டுவேலன்பட்டி ஆகிய ஊர்களில் 408 குடும்பங்களுக்கு மனு செய்தும் இதுவரை குடும்ப அட்டை வழங்கப்படவில்லை. காலந்தாழ்த்தாமல் குடும்ப அட்டை வழங்கும்படி வலியுறுத்தி 18.3.91 அன்று உசிலை விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பாக உசிலை - மலையாண்டி தியேட்டரிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு ஆர்.டி.ஓ. அலுவலகம் வந்தடைந்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஊர்வலத்தில் பெண்கள் உட்பட 60க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு சுமார் 300 பேர் கூடி ஆதரவு தந்தனர்.

### கொலையாளிகளுக்கு உடந்தையான போலீசு

உத்தமபாளைய வட்டம் பண்ணைப்புரம் கிராமத்தில் வசிக்கும் கூலி ஏழைத் தொலாளி வீரையாவின் 17 வயது மகள் தங்கம்மாள் கோரமாக உடலிலும் ஆடைகளிலும் ரத்தம் வடிந்த நிலையில் 21.3.91 அன்று தூக்கில் தொங்கினார். கொலை என்பதற்கான ஆதாரங்களை எல்லாம் மறைத்து தற்கொலைதான் என முடிவு செய்து போலி மருத்துவச் சான்றிதழ் (போஸ்ட் மார்டம் ரிப்போர்ட்) எல்லாம் வாங்கி பிரச்சினையை அமுக்கியது போலீசு! வள்ளி என்ற பெண்ணின் உதவியுடன் செந்தில், ஜெயபால், கோபால், மாரியப்பன் இன்னும் சிலரும் தங்கம்மாளை கற்பழித்து கொலை செய்துள்ளனர் என ஊர்மக்களால் திட்டவட்டமாக கூறப்படுகிறது. கொலையாளிகள் போலீசை தனியாக 'கவனித்து'விட்டு எளிதாக தப்பித்துக் கொண்டனர். கொலையாளிகளை தப்புவிக்கச் செய்வதில் ஊரின் பெரும்புள்ளியான தியாகராஜா தியேட்டர் பங்குதாரர் சுப்புராஜ்ஜும் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பாக போலீசு யாருக்காக இருக்கிறது என்பதை அம்பலப்படுத்தி உத்தமபாளையம் விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பாக தட்டி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

# தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதியின் அவலம்!

திருச்சி அண்ணா விளையாட்டு மைதானம் அருகில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதி உள்ளது. நகரின் பல கல்லூரிகளில் படிக்கும் 250 மாணவர்கள் இங்கு தங்கியுள்ளனர். மாநில, மத்திய அரசுகளின் உதவி தொகைகள் விடுதிக்கு ஒதுக்கப்பட்டும் கூட அடிப்படை வசதிகள் அறவே புறக்கணிக்கப் படுகின்றன. மேசை, நாற்காலி, மின்சாரம், நூலகம், மருத்துவம், கழிப்பிடம், குடிநீர், சுகாதாரமான உணவு முதலான எந்த வசதியும் இல்லை.

கடந்த வருடம விடுதி மாணவர்கள் பேருந்து மறியல் செய்ததன் விளைவாக தண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு ஒரு ஆழ்குழாய் கிணறு போட்டார்கள். 250 அடி ஆழத்திற்கு துளையிட்டு நீர் எடுக்க அனுமதித்து அரசு 45,000 ரூபாய் ஒதுக்கியது. 200 அடி ஆழம் மட்டுமே துளையிட்டு அதிலும் 100 அடி வரையே குழாய் போட்டு விட்டு மீதி பணத்தை அதிகாரிகள் சுருட்டிக் கொண்டனர். இதனால், குழாய் போடாத பகுதிகளில் மண் சரிந்து நீர்வரத்து குறைந்து விட்டது. தண்ணீர் பிரச்சினையை தீர்க்க பணம் கட்டி முனிசிபல் லாரி மூலம் தண்ணீர் கொண்டு வந்தது நிர்வாகம்! காலை 5 மணிக்கு வரும் லாரி தண்ணீரை மட்டுமே மாணவர்களால் பயன்படுத்த முடிகிறது. மாணவர்கள் கல்லூரிக்கு சென்ற பிறகு ஒரு லாரி தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இத் தண்ணீரை வெளியிலுள்ள டீக்கடைகளுக்கு சப்ளை செய்து காசு சம்பாதிக்கிறார்கள்.

இதுவல்லாமல் பாவா என்பவர் வெளியிலிருந்து ஆள்வைத்து சைக்கிள்மூலம் தண்ணீர் எடுத்து வருவதற்கு காண்டிராக்ட் எடுத்துள்ளார். ஆனால், முனிசிபாலிட்டி லாரி தண்ணீரையே திருடி எடுத்து விடுதி சமையலுக்கு வழங்குகிறார். மாதம் 3000 ரூபாய் இக் காண்டிராக்ட்டுக்குரிய பணமாக கணக்கெழுதி வார்டன் உள்ளிட்ட விடுதி நிர்வாகத்தினர் பலர் சுருட்டுகிறார்கள். இவர்களின் இக்கொள்ளைக்கு வசதியாகத்தான் மாணவர்கள் கல்லூரிக்கு சென்ற பிறகு தாமதமாக லாரி தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. வரும் லாரிகளிலும் அரை டாங்கு தண்ணீரே பல சமயம் வந்துள்ளது.

இதனால் மாணவர்கள் தண்ணீர் பற்றாமல் விடுதிக்கு வெளியே உள்ள பஞ்சாயத்து குழாயில் குளிப்பதற்கு பொதுமக்களோடு போட்டிபோட வேண்டியதாகி விடுகிறது. சாலையில் போகிறவர் வருபவர் மத்தியிலும் பெண்கள் மத்தியிலும் இப்படி தெருக் குழாயடியில் அரை நிர்வாணமாக குளித்து அவமானப்பட நேரிடுகிறது. விடுதியில் கழிப்பிடம் இருந்தும் நீர் இல்லாததால் காடு மேடு தேடி அலைந்து மாணவர்கள் அல்லல் படுவது வழமையாகிவிட்டது.

மேலும் விடுதி சம்பந்தமான அரசு ஆணையை மாணவர் பார்வைக்கு வைக்க வேண்டும் என்ற விதியிருந்தும் எதுவும் வைக்கப்படுவதில்லை. மாணவர்கள் கேட்கும்பொழுதும் வேறு விடுதியின் அரசு ஆணையைக் காட்டி ஏய்க்கிறார்கள். தட்டிக் கேட்கும் மாணவர்களை நிர்வாகத்தினர் நேரடியாக மிரட்டவும் செய்கிறார்கள். மாணவர்கள் மத்தியில் கருங்காலிகளை உருவாக்குவதற்கென்றே சுப்ரமணியன் என்பவரை தினக் கூலியாக வார்டன் நியமித்துக் கொண்டுள்ளார்.

மாணவர்களுக்கு எதிரான இத்தகைய கொடுமைகளுக்கு எதிராக திருச்சி புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி (RSYF) 16.3.91 அன்று கலெக்டர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியது. ஆர்ப்பாட்டத்திற்கு முன்பு வார்டன் செல்வராஜு போராட வேண்டாம் என கெஞ்சிப் பார்த்தார். அமைப்பின் உறுதியைக் கண்டு பின்னர் திரும்பிப் போனார்.

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

தவிர்க்கவியலாத காரணங்களால் 1-15 ஏப்ரல் இதழ் வெளிவருவது தாமதப்பட்டதால் 16-30 ஏப்ரல் இதழையும் சேர்த்து ஒரே இதழாக வெளியிட்டுள்ளோம். இதனால் தங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு மிகவும் வருந்துகிறோம். — ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

10 - 11

1 - 30 ஏப்ரல் '91

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

## தேர்தல் கமிஷன் நெறிமுறைகள்:

# இன்னுமொரு கேலிக்கூத்து!

பத்தாவது நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டது. தமிழக ஆட்சிக் கலைப்பின் மூலமும், ஒரு அரசியல் கழிசடையைக் காபந்து பிரதமராக்கியதன் மூலமும் தனது யோக்கியதையை நிரூபித்த குடியரசுத் தலைவரிடமும், ராஜீவின் கையாள் என அனைவராலும் அறியப்பட்ட தலைமைத் தேர்தல் ஆணையர் சேஷனிடமும் 'இந்திய ஜனநாயகம்' ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது. வரம்பு மீறும் தொழில் முறைக் கிரிமினல்களை 'எச்சரிக்கும்' போலீஸ் அதிகாரிகளைப் போல சேஷன் ஓட்டுக் கட்சிகளை எச்சரிக்கிறார். தேர்தல் விதிமுறைகளை நினைவுபடுத்துகிறார்.

ஒரு வேட்பாளர் அதிகபட்சம் ஒன்றரை லட்ச ரூபாய்க்கு மேல் செலவிடக்கூடாது; ஆட்சியிலுள்ள கட்சிகள் தங்கள் சாதனைகள் குறித்து அரசு விளம்பரம் தருவதும், புதிதாக அடிக்கல் நாட்டுவதும், அரசு வாகனங்களைப் பயன்படுத்துவதும், பயணியர் விடுதிகளை ஏகபோகமாகப் பயன்படுத்துவதும் கூடாது; ஓட்டுக்குப் பணம் கொடுப்பதும், வாக்காளர்களை வாகனங்களில் கொண்டு வருவதும் கூடாது... இன்ன பிற... இன்னபிற... இந்த விதிமுறைகள் அனைத்தும் வெறும் கேலிக்கூத்துக்கள்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

மேற்கூறிய விதிமுறைகளை அமல்நடத்தி வெற்றி கண்டுவிட்டதைப் போல புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது தேர்தல் ஆணையம். சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றின் பெயரால் மக்களிடையே பகையுணர்வைத் தோற்றுவிக்கும் வேட்பாளர்கள் வெற்றி பெற்றாலும், அத்தேர்தல் செல்லாது என அறிவிக்கப்படுமென்றும், அடுத்த 6 ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாதென்றும், அவர் மீது தனியே கிரிமினல் வழக்கு தொடரப்படும் என்றும் எச்சரித்துள்ளது. இது அமல்படுத்துவதற்கானது என்றால் பாரதீய ஜனதா கட்சி முதல் முஸ்லீம் மதவாதக் கட்சிகள் வரை அனைத்தும் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட வேண்டும். ரதயாத்திரையில் அத்வானி பயன்படுத்திய தாமரைச் சின்னம் முடக்கப்பட வேண்டும். இவையெதுவும் நடக்கவில்லை.

மார்ச் 25ம் தேதிக்குப் பின் அதிகாரிகள் யாரும் மாற்றப்படக் கூடாதென்ற உத்தரவைப் போல நகைப்புக்குள்ளானது வேறேதுமில்லை. 20ம் தேதியன்றே நான்கு ஆட்சியாளர்களை மாற்றியது தமிழகத்தின் காங் - அ.தி.மு.க.வின் பினாமி ஆட்சி. உ.பி.யில் 23, 24 தேதிகளில் மட்டும் 92 ஐ.ஏ.எஸ், அதிகாரிகளும், சவுதாலா முதல்வரானவுடனே அரியானாவில் 57 அதிகாரிகளும் மாற்றப்பட்டனர். காங். ஆட்சி செய்யும் ஆந்திரா, திரிபராவிலும், அரசியல் ஒழுக்கம் பற்றி அதிகமாகக் கூச்சல் போடும் பாரதீய ஜனதா கட்சியின் ம.பி. இமாசலப் பிரதேசத்திலும், ஜனதா தளத்தின் பீகாரிலும் அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளனர். 24ம் தேதி நள்ளிரவு 12 மணி வரை தொடர்ந்த இந்த மாற்றல்கள் பற்றி தனது அதிருப்தியைத் தெரிவித்ததற்கு மேல் சேஷன் எதுவும் செய்யவில்லை. ஏர்பஸ் ஊழல், செயிண்ட் கிட்ஸ் மோசடி, தொலைபேசி ஒட்டு கேட்ட விவகாரங்களை புலன் விசாரணை செய்யும் மத்திய புலனாய்வுத் துறை இணை இயக்குனர் கே.என்.சிங்கையும், தொலைக்காட்சியின் செய்தித்துறைத் துணை இயக்குனர் அவஸ்தியையும் பந்தாடியிருக்கிறார் காபந்து பிரதமர்.

இவையனைத்திற்கும் மேல் ஒருபடி போன 'மேகம்' புகழ் சவுதாலா, தனது கைப்பாவையை நீக்கி விட்டுத் தானே அரியானா முதல்வரானார். பெரும்பான்மை இன்றி ஆட்சி கவிழும் என்பதை எதிர்நோக்கி, அவ்வாறு நடந்தவுடனே சட்டசபையைக் கலைத்து மறுதேர்தல் நடத்துமாறு ஆளுனருக்கு சிபாரிசு செய்தார். அரசியல் சட்டப்படி அரியானாவில் நிர்வாகம் நடக்கவில்லை என்பதும், சவுதாலா காபந்து முதல்வராக முடியாதென்றும், ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்றும் சிபாரிசு செய்துள்ளார் அரியானா ஆளுனர். சவுதாலா காபந்து முதல்வராக நீடித்தால் அரியானா முழுவதுமே 'மேகம்' தொகுதிபோல் ஆகும் என்ற பீதியில் காங். உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஆளுனரின் சிபாரிசை ஆதிக்கின்றன.

பீற்றிக் கொள்ளப்படும் ஜனநாயகத் தேர்தலின் விதிமுறைகள் அனைத்தும் எல்லாக் கட்சியினாலுமே காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன. தில்லுமுல்லுகளுக்கு உதவும் சாதகமான அதிகாரிகள், வாக்குச் சாவடிகளைக் கைப்பற்ற குண்டர்படைகள், சாதி - மதவெறிப் பிரச்சாரம், பண மூட்டைகள்... அனைத்து ஓட்டுக் கட்சிகளும் துரிதமான தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. ''விதிமுறைகள் மீறப்பட்டால், ஒரு தொகுதியிலோ, தேவைப்பட்டால் மாநிலம் முழுவதுமோ கூட தேர்தலைச் செல்லாது என அறிவிக்கத் தயங்க மாட்டோம்'' என எச்சரிக்கை விடுத்துள்ளார் தலைமைத் தேர்தல் ஆணையர் சேஷன். தேர்தல் ஆணையத்தின் ஜனநாயகப் பற்றைக் காட்டும் அறிவிப்பல்ல இது; ராஜீவ் கும்பலுக்குத் தன் ஆதரவை உறுதி செய்யும் மறைமுகப் பிரகடனம். குடியரசுத் தலைவரும், தலைமைத் தேர்தல் ஆணையரும் வரவிருக்கும் தேர்தலில் ராஜீவ் கும்பலின் கையில் கிடைத்திருக்கும் இரண்டு கூடுதல் ஆயுதங்கள்!

தேர்தலுக்கு முன் அதிகாரிகளை மாற்றக்கூடாது; இது தில்லுமுல்லு - மோசடிகளுக்கு இடமளிப்பதாகும் என்று முறைகேடுகளை ஒழிக்க இவ்வளவு தூரம் வாதிடும் சேஷனே நேர்மையான கிரமமான முறையில் பதவிக்கு வந்தவரல்ல. திட்டக் கமிஷன் தலைவர் என்ற அதிகாரமில்லாத பதவியில் இருந்தவரை, தனது நீண்டகால விசுவாசி என்பதால் சுப்ரமணியசாமியின் ஏற்பாட்டின்படி சந்திரசேகரை நிர்பந்தித்து சேஷனை தலைமை தேர்தல் கமிஷனராக ராஜீவ் கும்பல் நியமித்துள்ளது. ஆகவே தேர்தல் கமிஷன் என்ற அதிகார வர்க்க அமைப்பு சுயேட்சையானது, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது, நடுநிலையானது என்ற பிரமை எதுவும் தேவையில்லை. நேர்மையான முறையில் ஜனநாயக ரீதியில் தேர்தல்கள் நடக்கும் என்று நம்பவும் அடிப்படை இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

○ சிமன்பாய் பட்டேல் ○ முலயாம்சிங் யாதவ் ○ சரத்பவார்
○ பிஜூபட்நாயக் ○ லல்லுபிரசாத் யாதவ் ○ ஷெகாவத்

# சக்ரவர்த்திகளை மிரட்டும் குறுநில மன்னர்கள்

**இவர்கள் சார்ந்துள்ள கட்சித் தலைமையால்கூட இவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. எந்த கட்சியும் இவர்களது ஆதரவு இல்லாமல் மத்தியிலே ஆட்சி அமைக்கவோ அதை தக்க வைத்துக் கொள்ளவோ முடியாது.**

இந்திய அரசியல் அரங்கில் புதிய வகையிலான ஒட்டுப் பொறுக்கித் தலைவர்கள் சிலர் உருவாகியுள்ளனர். இவர்களுக்கு குறிப்பிட்ட கொள்கை - லட்சியம் என்று எதுவும் கிடையாது. காற்று எந்தப் பக்கம் வீசுகிறதோ அந்தப் பக்கம் வளைந்து கொள்ளக் கூடிய நெளிவு சுளிவு தெரிந்த கைதேர்ந்த அரசியல்வாதிகள், இவர்கள். காளிமுத்து, நெடுஞ்செழியன் போல பதவி ஆசையால் எந்த கட்சிக்கும், தாவக்கூடிய பிழைப்பு வாதிகளாக மட்டும் இவர்களைக் கருத முடியாது. சாதிய பலம், பண பலம், குண்டர் பலத்தோடு கணிசமான அளவுக்கு எம்.எல்.ஏ., எம்.பிக்களை தம் பிடியில் வைத்துக் கொண்டு மாநில அளவில் செல்வாக்கு செலுத்தக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள். இவர்கள் சார்ந்துள்ள கட்சித் தலைமையால் கூட இவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. கட்சித் தலைமைக்கே தண்ணீர் காட்டும் அரசியல் கில்லாடிகள், இவர்கள். மாநில அரசியலை ஆட்டிப் படைக்கும் இவர்கள் எந்த தேசியக் கட்சிக்கும் எதிரான வர்களல்ல. இன்னும் சொல்லப் போனால், எந்த தேசியக் கட்சியும் இவர்களது ஆதரவு இல்லாமல் மத்தியிலேயே ஆட்சி அமைக்கவோ அதை தக்க வைத்துக் கொள்ளவோ முடியாது.

இத்தகைய புதியவகை அரசியல் ஒட்டுண்ணிகள் பொறுக்கி அரசியலும் கிரிமினல் அரசியலும் கலந்த ஒரு புதுவகையான புல்லுருவி அரசியலைப் பிரதிபலிக்கிறார்கள். சந்தர்ப்பவாதமும் பிழைப்புவாதமும் பதவிவெறியும் கொண்ட புதிய வீரிய ஒட்டு ரக அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கி பரப்பி வருகிறார்கள். உத்திரப் பிரதேசத்தின் முலயாம்சிங் யாதவ், குஜராத்தின் சிமன்பாய் பட்டேல், மகாராஷ்டிராவின் சரத் பவார், பீகாரின் லல்லு பிரசாத் யாதவ், ஒரிசாவின் பிஜூபட்நாயக், ராஜஸ்தானின் ஷெகாவத் ஆகியோர் இப்புதிய வகை அரசியலின் முன்னோடிகளாக உள்ளனர். மாநில அரசியலை ஆட்டிப் படைக்கும் இவர்கள், இப்போது மத்திய ஆட்சியையும் அரசியலையும் கலக்கும் அளவுக்கு சக்கரவர்த்திகளை மிரட்டும் குறுநில மன்னர்களாக வளர்ந்துள்ளார்கள்.

காங்கிரசு, ஜனதாதளம், பாரதீய ஜனதா முதலான ஆளும் வர்க்க தேசிய கட்சிகள், இவர்களின் தயவு இல்லாமல் தேர்தலில் வெற்றி பெறுவதோ ஆட்சி அமைப்பதோ சாத்தியமில்லை என்ற நிலைமை உருவாகியுள்ளது. இத் தேசியக் கட்சிகளும் வட மாநிலங்களில் இவர்களை விட்டால் வேறு நாதியில்லை என்று இப்புதுவகை அரசியல் வாதிகளிடம் இப்போது தஞ்சம் புகுந்துவிட்டன. காந்தியம், இந்துராஷ்டிரம், போலி சோசலிசம் ஆகியன முற்றாக அம்பலப்பட்டு தோற்றுப் போயுள்ள நிலையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காக்க இத்தகைய கழிசடை அரசியல் இப்போது ஆளுமைக்கு வந்துவிட்டது.

**முலயாம்சிங் யாதவ்:**

தனது கழிசடை அரசியலால் உத்திரப் பிரதேசத்தில் மட்டுமின்றி ராஜீவ், சந்திர சேகருக்கும் தண்ணீர் காட்டும் அளவுக்கு செல்வாக்கு பெற்றுள்ளவராக உயர்ந்துள்ளார், முலயாம்சிங் யாதவ்.

உ.பி.யிலுள்ள மாஃபியாக்களும், கொள்ளையர்களும் முலயாம்சிங்கின் நெருங்கிய கூட்டாளிகள் என்பது ஊரறிந்த கதை. இதை அவரும் மறுக்கவில்லை. ''என்னுடன் நட்பு கொண்ட பிறகு அவர்கள் திருந்திவிட்டார்கள். ஜெயப்பிரகாஷ் நாராயணனைப் போல நான் அவர்களைப் புது மனிதனாக்கி விட்டேன்'' என்கிறார்.

வி.பி.சிங் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுலாக்கப் போவதாக அறிவித்ததும், வரிந்து கட்டிக் கொண்டு ஆதரித்து பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஆதரவைப் பெற்றார். இதேபோல, அயோத்தி விவகாரத்தில் பாரதீய ஜனதாவுக்கு எதிராக 'வகுப்பு வாத எதிர்ப்பு' பிரச்சாரத்தை தீவிரமாக நடத்தி, முஸ்லீம்களிடமும் நடுநிலையாளர்களிடமும் கணிசமான ஆதரவைப் பெற்றார். பாரதீய ஜனதா தனது ஆதரவை விலக்கிக் கொண்டு மத்தியில் ஜனதாதள - தேசிய முன்னணி ஆட்சியைக் கவிழ்த்தாலும், தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள பரந்த ஆதரவைத் திரட்டிக் கொள்ளவே இவ்வாறு மண்டல் ஆதரவு - வகுப்புவாத எதிர்ப்பு நாடகமாடினார். இதே நோக்கத்துடன் உருது மொழியையும் இந்தியுடன் சேர்த்து ஆட்சி மொழியாக்கினார்.

வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்ததும், ஜனதா தளத்திலிருந்து விலகி சந்திரசேகர் கட்சிக்கு மாறி காங்கிரசு ஆதரவுடன் தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டார். இருப்பினும் உ.பி.மாநில காங்கிரசார், அடுத்தடுத்து நடந்த மதக் கலவரங்களைக் காட்டி முலயாம்சிங் ஆட்சியைக் கவிழ்க்குமாறு ராஜீவை நிர்பந்தித்தனர். ஆனாலும், அவரது ஆட்சியைக் கவிழ்க்க யாராலும் முடியவில்லை. ஏனெனில், முலயாம்சிங் யாதவ் தன் கையில் 30 எம்.பி.க்களை வைத்திருந்தார். அவரது ஆட்சியைக் கவிழ்த்தால், அதைத் தொடர்ந்து முலயாம்சிங்கின் 30 எம்.பி.க்களும் சந்திரசேகர் அரசைக்

குறுநில மன்னர்கள் ஓரணியில்; (இடமிருந்து வலமாக) பிஜூபட்நாயக், சிமன்பாய் பட்டேல், முலயாம்சிங் யாதவ், லல்லுபிரசாத் யாதவ்.





படிப்பகம்

www.padippakam.com

கவிழ்த்து விடுவார்கள்; அது காங்கிரசின் திட்டங்களைத் தவிடு பொடியாக்கிவிடும் என்ற பீதியினால் ராஜீவ் கும்பல் முலயாம் சிங்கைக் கண்டு அஞ்சியது.

இப்படி மாநில அரசியலை மட்டுமின்றி மத்திய அரசியலையும் கலக்குமளவுக்கு செல்வாக்கு பெற்ற முலயாம்சிங், இப்போது சந்திரசேகர் அரசு கவிழ்ந்தபோது குடியரசுத் தலைவரைச் சந்தித்து ஆலோசனை கூறுமளவுக்கு உயர்ந்துள்ளார். ராஜீவ் - சந்திரசேகர் கூட்டுக்கு இடைத்தரகராகச் செயல்பட்ட முலயாம்சிங், இப்போதைய நாடாளுமன்றத் தேர்தலிலும் இந்தக் கூட்டு நீடிக்க பேரம் நடத்துகிறார். ஆனால் சந்திரசேகர், காங்கிரசுடன் கூட்டணி உறுதிப்படாத நிலையில் தனித்து போட்டியிட வேண்டுமென்கிறார். இதை எதிர்த்து முலயாம்சிங்கும், குஜராத் முதல்வர் சிமன்பாய் பட்டேலும் கலகம் செய்கின்றனர்.

**சிமன்பாய் பட்டேல்:**

முலயாம்சிங் யாதவுக்கு இணையாக ஓட்டுண்ணி அரசியலின் பிதாமகனாக உருவாகி வளர்ந்துள்ளார், குஜராத் முதல்வர் சிமன்பாய் பட்டேல். காங்கிரசிலிருந்து விலகி தனியே ஒரு மாநிலக் கட்சியைத் துவக்கி பின்னர் ஜனதா கட்சியில் சேர்ந்து, அதன் பிறகு ஜனதா தளத்துக்குத் தாவி இப்போது சந்திரசேகர் கட்சியிலுள்ள சிமன்பாய் பட்டேல் கொட்டை போட்ட அரசியல் பெருச்சாளி. தனது ஊழல் - மோசடிகளால் ''திருடன்'' ''ஊழல் பெருச்சாளி'' என்று மக்களால் அன்புடன் அழைக்கப்படுபவர். பண பலத்தைக் கொண்டு எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர்வதிலும், எதிர்க்கட்சியினரை விலைக்கு வாங்குவதிலும், கட்சி மாறிகளைக் கொண்டு ஆட்சியைப் பிடிப்பதிலும், புதிய சாதனைகளைப் படைத்தவர்.

ஜனதா தளம் - பாரதீய ஜனதா உறவு முறிந்து வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்ததும் குஜராத்திலும் இத்தகைய கூட்டணி ஆட்சி கவிழும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், சிமன்பாய் பட்டேல் காங்கிரசின் ஆதரவுடன் தனது சிறுபான்மை ஆட்சியைத் தொடர்ந்ததோடு, மத்தியிலும் சந்திரசேகர் தலைமையில் இத்தகைய காங்கிரசு ஆதரவு பெற்ற சிறுபான்மை அரசு அமைய மூலகாரணமாக இருந்தார். இருப்பினும் இந்தக் கூட்டணி நீடிக்குமா என்று சிமன்பாய்க்கு சந்தேகமாக இருந்தது. எனவேதான் எந்த முடிவும் எடுக்காமல் மூன்று மாதங்களுக்குப் பின்னரே சந்திரசேகர் கட்சியுடன் இணைந்தார்.

காங்கிரசை விட அதிக இடங்களைப் பெற்றுள்ள பாரதீய ஜனதா, சிமன்பாய் பட்டேலின் சிறுபான்மை ஆட்சியைக் கவிழ்க்க பலமுறை முயற்சி செய்தது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது ஆளும்கட்சி எம்.எல்.ஏக்களை அது கடத்திக் கொண்டு போனது. இருப்பினும், தனது பெரும்பான்மையை நிரூபிக்க கவர்னரிடம் அவகாசம் கோரி, தனது கட்சி எம்.எல்.ஏ.க்களை மீட்டதோடு, பாரதீய ஜனதாவையும் பிளந்து அதில் சிலரை விலை பேசி தன்பக்கம் இழுத்துக் கொண்டு ஆட்சியைத் தொடர்ந்தார் சிமன்பாய் பட்டேல். இதன்மூலம் 'எந்த நெருக்கடியையும் சமாளிக்கும் ஆற்றல் பெற்ற அரசியல் கில்லாடி' என்று பத்திரிக்கைகளால் பாராட்டப்பட்டார்.

**காந்தியம், இந்துராஷ்டிரம், போலி சோசலிசம் ஆகியன முற்றாக அம்பலப்பட்டு தோற்றுப் போயுள்ள நிலையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காக்க இத்தகைய கழிசடை அரசியல் இப்போது ஆளுமைக்கு வந்து விட்டது.**

சந்திரசேகர் கட்சிக்கு உ.பி., குஜராத்தை விட்டால் வேறு கதி இல்லை. அதிகார மையங்களான முலயாம் சிங்கும், சிமன்பாயும் ஒத்துழைத்தால்தான் சந்திரசேகர் கட்சி தேர்தலில் நிற்கவே முடியும். காங்கிரசு, ஜனதா தளம், பாரதீய ஜனதா ஆகிய கட்சிகளுடன், உள்ளூர் அளவில் நிலைமைக்கேற்ப கூட்டணி கட்டிக் கொள்ள வேண்டும் என்பது சந்திரசேகரின் திட்டம். ஆனால், முலயாம் சிங்கும் சிமன்பாயும் மீண்டும் காங்கிரசுதான் ஆட்சிக்கு வரும் என்று கணக்கு போட்டு அதனுடன் மட்டும் கூட்டுச் சேர வேண்டும் என்கின்றனர். இந்த முரண்பாடு காரணமாக சிமன்பாய் பட்டேல் சந்தரேசேகர் கட்சியிலிருந்து விலகி தனியே ஒரு மாநிலக் கட்சியைத் துவக்கவும் முடிவு செய்துள்ளார்.

**சரத் பவார்:**

முலயாம்சிங் யாதவ், சிமன்பாய் பட்டேலைப் போல மகாராஷ்டிராவில் தனிப் பெரும் செல்வாக்கு பெற்ற கழிசடை அரசியல் தலைவராக வளர்ந்துள்ளார் சரத்பவார். ஓட்டுப் பொறுக்கி அரசியலின் அனைத்து கலைகளிலும் வல்லவராக விளங்கும் பவாரின் 'சாணக்கியத்தனம்'தான் அவரது செல்வாக்கிற்கு காரணம். பம்பாய் தரகுப் பெரு முதலாளிகளிடம் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் நம்பகமான அரசியல் பிரதிநிதியாக உயர்ந்த பவார், அதே போல மராட்டிய அரசியலை ஆட்டிப் படைக்கும் சர்க்கரை ஆலை அதிபர்களின் ஏகபோக பிரதிநிதியாக வளர்ந்தார். பம்பாய் ரகசிய உலகப் பேர்வழிகள், கடத்தல் மாஃபியா குண்டர்களுடன் பவாருக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. அவர்கள் தமது கருப்புப் பணத்தை ரியல் எஸ்டேட் தொழிலில் முதலீடு செய்து சட்டபூர்வமான முதலாளிகளாக வளர பவார் பேருதவி செய்தார். வீட்டு மனை பேர ஊழல், ரியல் எஸ்டேட் ஊழல்களில் ஊறித் திளைத்த பவார், தனது கொள்ளையை மூடி மறைக்க மராத்தா சாதியினரை தனக்கு அரணாக அமைத்துக் கொண்டு சாதிய அரசியலை ஊட்டி வளர்த்தார். எதிர்க் கட்சிகளான பாரதீய ஜனதா, சிவசேனாவுடன் ரகசியமாக உறவு கொள்வது; அரசு பதவிகள், சன்மானங்கள் முதலான எலும்புத் துண்டுகளை அவர்களுக்கும் கொஞ்சம் வீசி குரைக்காமல் பார்த்துக் கொள்வது; சுயேட்சைகளை விலைக்கு வாங்கி காங்கிரசு ஆட்சியை கவிழ்ந்து விடாமல் காப்பாற்றி வருவது முதலான ராஜதந்திரத்தின் மூலம் ராஜீவின் தயவை நம்பிக் கொண்டிராமல் சுயமாக தன்னால் நிற்க முடியுமென்பதை பவார் நிரூபித்துக் காட்டினார்.



சரத்பவார் - சிவசேனா தலைவர் பால்தாக் கரேவுடன்

இப்படி ராஜீவுக்கு அடுத்த மிகப் பெரிய பணக்கார அரசியல்வாதியாக உயர்ந்த சரத்பவார், இதன்மூலம் பல காங்கிரசு எம்.பிக்களை தன் பக்கம் வளைத்துப் போட்டுக் கொண்டார். முன்னாள் மத்திய மந்திரியும் காங்கிரசு பெருச்சாளியுமான வசந்த் சாத்தே, பவாரின் பண மழையில் மூழ்கி ராஜீவுக்கு எதிராக அவ்வப்போது கலகக் கொடி தூக்கவும் செய்தார். ராஜீவ் - சந்திரசேகர் கூட்டுக்கு இடைத்தரகராகச் செயல்பட்ட பவார், அதன் பிறகு சந்திரசேகருடன் கூடிக் குலாவி அகில இந்திய அரசியலில் செல்வாக்கு பெறவும் முயன்றார்.

தனது ஏகபோகத் தலைமைக்கு அச்சுறுத்தலாக வளர்ந்துவிட்ட சரத்பவாரை, ராஜீவால்கூட நீக்க முடியவில்லை. பவாருடன் பேரங்கள் நடத்தி அனுசரித்துப் போவதைத் தவிர ராஜீவுக்கும் வேறு வழியில்லை என்கிற அளவுக்கு பவார் இப்போது மகாராஷ்டிராவை ஆட்டிப் படைக்கும் ஏகபோகத் தலைவராகிவிட்டார்.

**பிஜூ பட்நாயக்:**

ஒரிசாவில் பிஜூ பட்நாயக் ஜனதா தளத்தின் தனிப் பெரும் தலைவராக வளர்ந்து இப்போது கட்சித் தலைமையையே கண்ணில் விரல் விட்டு ஆட்டுகிறார். கடந்த தேர்தலில் ஒரிசாவில் வீசிய காங்கிரசு எதிர்ப்பு அலையைச் சாதகமாக்கிக் கொண்டு ஆட்சியைப் பிடித்த பிஜூபட்நாயக், இந்த வெற்றிக்கு நான்தான் காரணம் என்று மார்தட்டினார். வி.பி.சிங் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுலாக்க முற்பட்டபோது அதை வெளிப்படையாக எதிர்த்தார். ஊழல் அதிகாரிகளை மக்கள் உதைக்க வேண்டும் என்று ஸ்டண்ட் அடித்தார். உ.பி. மாநிலத்திலிருந்து மட்டுமே பிரதமர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்; அவர்கள் நாட்டைச் சீரழித்துவிட்டார்கள் என்று பகிரங்கமாக வி.பி.சிங் உட்பட அனைவரை

படிப்பகம்

www.padippakam.com

...பும் குற்றம் சாட்டினார். இப்போது, ''ஒரிசா மாநிலம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. ஒரிசாவுக்குத் தேவையான நிதி அதிகாரங்களை மத்திய அரசு கொடுக்க வேண்டும். இல்லையேல் ஒரிசா இந்தியாவிலிருந்து பிரிய வேண்டிய நிலை ஏற்படும்'' என்று கொக்கரிக்கிறார்.

இப்படி கட்சிக் கொள்கைக்கு எதிராக, தலைமைக்கு கட்டுப்பட மறுத்து பிஜூபட்நாயக் என்ன பேசினாலும், ஜனதாதளக் கட்சியினர் அதை எதிர்ப்பதில்லை. மாறாக அவரது பேச்சுக்கு நியாயம் கற்பித்து அனுசரித்துப் போகின்றனர். ஏனெனில், ஒரிசாவில் பிஜூபட்நாயக்கை விட்டால் ஜனதா தளத்துக்கோ, போலிக் கம்யூனிஸ்டுகளுக்கோ வேறு நாதியில்லை. இதைப் புரிந்து கொண்ட பிஜூபட்நாயக், சரத் பவாரைப் போலவே புல்லுருவி அரசியலின் ஏகபோகத் தலைவராகி ஒரிசாவை ஆட்டிப் படைக்கிறார்.

### லல்லு பிரசாத் யாதவ்:

இதே வகையில் பீகாரின் லல்லு பிரசாத் யாதவ் சாதிய பலம், கிரிமினல் - மாஃபியாக்களின் பலத்துடன் ஒரு குறுநில மன்னராக வளர்ந்துள்ளார். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஆதரித்து தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட சாதியினரின் நண்பனாகக் காட்டிக் கொண்ட லல்லுபிரசாத், பின்னர் தனது சிறுபான்மை ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள ஒவ்வொரு சாதிக்கும் சலுகைகளை வாரியிறைத்தார். மத்தியில் ஜனதாதள - பாரதீய ஜனதா உறவு முறிந்ததைத் தொடர்ந்து, பீகாரிலும் பாரதீய ஜனதா தனது ஆதரவை விலக்கிக் கொண்டு லல்லுபிரசாத் யாதவின் ஜனதாதள ஆட்சியைக் கவிழ்க்க முயன்ற போது, பாரதீய ஜனதா கட்சியையே பிளந்து ஒரு பிரிவினரை விலைபேசி தனக்கு ஆதரவாக மாற்றிக் கொண்டார்.

அதேபோல சமூக நீதிக்கான ஒடுக்கப்பட்ட மக்களின் ஆட்சியைக் காப்பது என்ற பெயரில் இந்திய மக்கள் முன்னணி, ஜார்கந்து முக்தி மோர்ச்சா மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளைத் தனக்கு ஆதரவாகத் திரட்டிக் கொண்டார். அதிருப்தியாளர்களைச் சரிக்கட்ட அனைவருக்கும் மந்திரி பதவி கொடுத்து இந்தியாவிலேயே மிகப் பெரிய ''ஏர்பஸ்'' மந்திரிசபையை அமைத்தார். எம்.எல்.ஏ.க்கள் மாருதிகார் வாங்க கடனுதவி, வெளிநாடுகளுக்கு சுற்றுலா, உடனடி சமையல் எரிவாயு இணைப்பு என்று அரசு சன்மானங்களை வாரியிறைத்து அவர்களைக் குளிப்பாட்டினார். இப்படி எல்லா தரப்பினரையும் சரிக்கட்டி கட்சித் தலைமையையே அச்சுறுத்தும் அளவுக்கு தனிப்



பைரோன்சிங் ஷெகாவத்

பெரும் சக்தியாக வளர்ந்துள்ளார்.

### பைரோன்சிங் ஷெகாவத்:

கட்டுப்பாடு மிக்க கட்சியாக கருதப்படும் பாரதீய ஜனதாவின் ராஜஸ்தான் முதல்வரான பைரோன்சிங் ஷெகாவத் இதே போல புதியவகை அரசியல் தலைவராக வளர்ந்து கட்சித் தலைமையையே கண்ணில் விரல் விட்டு ஆட்டுகிறார். இரு ஜனதா தள கட்சிகளுடன் எந்த உறவும் இல்லை என்று பாரதீய ஜனதா முறித்துக் கொண்ட போதிலும், ஜனதா தளத்தை உடைத்து அதில் ஒரு பிரிவான சந்திரசேகர் ஆதரவு கோஷ்டியை மாநிலக் கட்சியாக்கி கட்சிக் கட்டுப்பாட்டை மீறி அதன் ஆதரவில் தனது சிறுபான்மை ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார். இந்து வெறி நிலப்பிரபுத்துவ சக்திகள் மற்றும் கட்சி மாறிகளின் ஆதரவுடன் தனது ஆட்சியைத் தொடர்ந்து வரும் ஷெகாவத், பாரதீய ஜனதா கட்சித் தலைமையே தன்னை அனுசரித்துப் போகுமாறு பணிய வைத்துள்ளார்.

மேற்கூறிய மாநிலங்களில் ஒரிசாவைத் தவிர மற்ற அனைத்திலும் சிறுபான்மை அரசுதான் ஆட்சியில் உள்ளது. இருப்பினும் எல்லா நெருக்கடிகளையும் சமாளித்து தொடர்ந்து நிலையான ஆட்சியைத் தருவதாக இம்மாநில முதல்வர்களை எல்லா பத்திரிக்கைகளும் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் ஏற்றிப் போற்றுகின்றனர்.

**இத்தகைய கழிசடை அரசியல் என்பது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இழிந்த இறுதிநிலை மட்டுமல்ல; பாசிச சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான சமூக, சித்தாந்த, அமைப்பு அடிப்படையை இத்தகைய அரசியல் சக்திகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன.**

### பாசிசத்துக்கான அடிப்படை

இவ்வாறு ஒட்டுண்ணி அரசியல் முழுவீச்சில் ஆளுமைக்கு வரும்போது முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் முதலில் அருவருப்பாகத்தான் பார்த்தார்கள். ஆனாலும் சிமன்பாய் பட்டேலின் ''சாணக்கியத்தனம்'' முலயாம்சிங் யாதவின் ''திறமை'', சரத்பவாரின் ''செல்வாக்கு'' என்று சொல்லி அவற்றை சகித்துக் கொண்டதோடு, நிலையான ஆட்சி தரக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள் என்று அவர்களை ஆதரிக்கவும் செய்கின்றனர். முன்பெல்லாம் இத்தகைய அரசியல் சக்திகள் வளரும்போது அரசியலின் தரம் தாழ்ந்துவிட்டது என்று இவர்கள் ஒப்பாரி வைத்தார்கள். இப்போது எந்த முணுமுணுப்புமின்றி இத்தகைய கழிசடைகளை வெளிப்படையாகவே அங்கீகரிக்கத் தொடங்கி விட்டார்கள்.

முதலாளித்துவ பத்திரிக்கைகளும் இத்தகைய கழிசடை அரசியல்வாதிகளை ஆதரித்து பரபரப்பான செய்திகளை வெளியிடுகின்றன. பத்திரிக்கைகள் இவர்களை ''திறமைசாலி, சூத்திரதாரி, உறுதியானவர், சிக்கலைத் தீர்க்கும் வல்லுனர், அரசியல் சாணக்கியர், அரசியல் சித்தர், நிலையான ஆட்சியைத் தரும் அரசியல் கலைஞர்'' என்ற அடைமொழிகளுடன் பாராட்டுகின்றன. மாநில அளவில் செல்வாக்கு பெற்றுள்ள இவர்களை தேசிய கட்சிகள் உதாசீனம் செய்துவிடக் கூடாது என்று உபதேசிக்கின்றன. இவர்களது கழிசடை அரசியலின் தனிச் சிறப்புக்களை பெருமையாக எழுதி, இத்தகைய துணிவும் முன்முயற்சியும் யாருக்கு வரும் என்று புகழ்பாடுகின்றன.

இத்தகைய கழிசடை அரசியல் என்பது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இழிந்த இறுதிநிலை மட்டுமல்ல; அதற்கே எதிரான அபாயகரமான போக்கு. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் எல்லா போலித் தனங்களையும் வீசி எறிந்துவிட்டு அப்பட்டமான பாசிச சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான சமூக, சித்தாந்த, அமைப்பு அடிப்படையை இத்தகைய அரசியல் சக்திகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. ஏனெனில், இத்தகைய கழிசடை அரசியலுக்கு கொள்கை - லட்சியம் என்று எதுவும் கிடையாது. அது பொறுக்கி அரசியலும், கிரிமினல் அரசியலும் கலந்த வீரிய ஒட்டு ரகம். அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக யாருடனும் கூட்டுச் சேரத் தயங்காத பிழைப்பு வாதிகளின் கூடாரம். எனவே, இத்தகைய கழிசடை அரசியல் பாசிசம் அரங்கேறுவதற்கான எல்லா அடிப்படைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் அபாயகரமான போக்காகும்.

காந்தியம், இந்து ராஷ்டிரம், போலி சோசலிசம் முதலானவை தோற்றுப் போனதால், மட்டுமல்ல; குறிப்பாக மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தைத் திரித்து பாமரத்தனமான போலி சோசலிச சித்தாந்தத்தைப் போலிக் கம்யூனிஸ்டுகள் பிரச்சாரம் செய்வதால்தான் இத்தகைய புல்லுருவி அரசியல் வெற்றிபெற முடிகிறது. சந்தர்ப்ப வாதிகளாகச் சீரழிந்து கழிசடை அரசியல் சக்திகளுடன் அவர்கள் கூட்டுச் சேர்வதால் அது மேலும் வலுவடைகிறது. எனவே, போலிக் கம்யூனிஸ்டுகளின் துரோகத்தை அம்பலப் படுத்தி, தொழிலாளி - விவசாயிகள் கூட்டை சமூக அடிப்படையாகவும், மார்க்சிய - லெனினியத்தை சித்தாந்த அடிப்படையாகவும் கொண்ட புரட்சிகர அமைப்புகள் மட்டுமே இத்தகைய கழிசடை அரசியலுக்கு மாற்றாக இருந்து அதை முறியடிக்க முடியும்.

● மனோகரன்.



படிப்பகம்

www.padippakam.com

# ராணுவ கும்பலின் அட்டூழியம்

மேற்கு வங்கம் நாடியா மாவட்டத்தில் கடந்த மார்ச் 17-ந் தேதி 12 பேர் எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) யினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். அருகிலுள்ள பங்களாதேஷிற்கு நாடியா - தேப்நாத்பூர் கிராமத்திலிருந்து கால்நடைகளை கடத்திச் சென்ற கடத்தல் கும்பலை எல்லைப் பாதுகாப்புப் படையினர் பிடிக்கத் தவறிவிட்டனர். இதனால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் எல்லை பாதுகாப்பு படையினரை 'கெரோ' செய்து தாக்க முற்பட்டனர். எனவே, வேறு வழியில்லாமல் கூட்டத்தைக் கலைக்க துப்பாக்கிச் சூடு நடத்தவேண்டியதாயிற்று - என அரசு மற்றும் BSF - அதிகாரிகள் தரப்புச் செய்தியை அனைத்து நாளேடுகளும் கக்கின.

இல்லை;இல்லை. கால்நடைகளை திருடியதே எல்லை பாதுகாப்பு படையினர் தான். இதற்கு ஆதாரமிருக்கிறது. திருட்டுக் கும்பல் தாராசந்த் சர்க்கார் என்பவரின் மாட்டுத் தொழுவத்தில் மாட்டை கடத்த முயன்ற பொழுது சத்தம் கேட்டு எழுந்த சர்க்கார் கூச்சல் போட்டு ஊரைக் கூட்டினார். கிராமத்தார் பலர் கூடி திருடர்களை பிடிக்க முயன்றதில் ஒருவனின் கால் 'பூட்' அவர்கள் கையில் சிக்கியது. அது எல்லைப் பாதுகாப்பு படையினருக்கென்றே பிரத்யேகமாக தயாரிக்கப்படுவது! அருகிலுள்ள எல்லைப் பாதுகாப்புப்படை - சோதனைச் சாவடியில் சென்று மக்கள் முறையிட்டு தப்பித்தவர்களை பிடிக்கக் கோரினர். அங்கிருந்தவர்கள் மறுத்துவிட்டனர். எனவே மக்களே நடவடிக்கையில் இறங்கினர்.

தப்பித்தவர்கள் அருகிலுள்ள வாழைத் தோட்டத்தில் ஒளிந்திருப்பதை அறிந்து அங்கு போய் பிடித்தனர். அகப்பட்ட நால்வரில் ஒருவனது வலது காலில் 'பூட்'இல்லாமல் இருந்ததோடு நால்வரும் எல்லை பாதுகாப்புப் படையினர் என உறுதிப்படுத்தப் பட்டனர். ஆத்திரமடைந்த மக்கள் திருடர்களை நையப்புடைத்து ஒரு கடையில் போட்டு பூட்டி வைத்தனர். தேப்நாத்பூரில் இருந்த மற்ற சில எல்லை பாதுகாப்பு படையினரையும் இழுத்து வந்து அடைத்தனர்.

பின்னர் போலீசு மேலதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து நடவடிக்கை எடுக்கக் கோரினர். தேஹட்டா போலீசு நிலைய அதிகாரியும் எல்லை பாதுகாப்புப் படையினர் பூட்டி வைக்கப்பட்ட கடைக்கு இரு 'கான்ஸ்டபிள்'களை காவலுக்கு நிறுத்திவிட்டு சம்பவம் நடந்த இடத்தை பார்வையிடச் சென்றனர். ஆனால் அதற்குள் அருகிலுள்ள நட்னா முகாமின் எல்லை பாதுகாப்புப் படையினர் செய்தியறிந்து தங்கள் சகாக்களை மீட்க வந்தனர். போலீசு கான்ஸ்டபிள்களை அடித்து தள்ளிவிட்டு தங்கள் சகாக்களை மீட்டுச் சென்றபோது தடுத்த மக்களை நோக்கிச் சுட்டனர். கடைகளிலும் வீடுகளிலும் புகுந்து சிலரை சுட்டுக் கொன்றனர். இதுதான் நடந்த உண்மைச் சம்பவம் என பின்னர் சில பத்திரிக்கையாளர்களின் முயற்சியால் செய்தி வந்தது.

பிரச்சினை பெரிதாகிய பின்னரே ஆளும் 'மார்க்சிஸ்டுகள்' அக்கறை கொண்டவர்களாக நடவடிக்கையில் இறங்கினர். எல்லை பாதுகாப்புப் படையினர் மீது வழக்கு பதிவாகி சிலர் வேலைநீக்கமும் செய்யப்பட்டனர். மேற்கு வங்க எல்லைப் புற மாவட்டங்கள் கடத்தல்காரர்களின் சொர்க்க புரியாக மாறிவிட்டதை மூடி மறைக்கவே இப்படி அரக்க பறக்க ஒப்புக்கு நடவடிக்கை எடுக்க வைத்துவிட்டு பிரச்சினையை கிடப்பில் போட்டனர்.

ஆனால் உண்மை வெளிவரவே செய்தது. கால்நடைகள் மட்டுமல்ல; பாமாயில், எலெக்ட்ரானிக் பொருட்கள், தங்கம், போதைப் பொருட்கள் உட்பட அனைத்தையும் கடத்தும் கிரிமினல் கும்பல்கள்தான் மே.வங்க எல்லையோர மாவட்டங்களில் செல்வாக்கு பெற்றிருக்கின்றன. பங்களாதேஷில் கால்நடைகளின் கிராக்கியும், விலையும் அதிகம். உதாரணத்திற்கு ஒரு மாட்டின் விலை 8500 ரூபாய்! எனவே கிரிமினல் கும்பல்கள் ஆடு மாடுகளை கடத்துவதே பிரதான 'தொழிலாக' இங்குள்ளது. கடத்தப்படும் ஆடு, மாடுகளின் தலைக்கு 150 முதல் 200 ரூபாய் வரை வசூலித்துக் கொண்டு அனுமதிக்கின்றனர், எல்லை பாதுகாப்பு படையினர்! வருமானம் போதவில்லையென்று இப்போது கடத்தலில் தாமே ஈடுபட்டு வசமாக மாட்டிக் கொண்டார்கள்.

இராமேஸ்வரத்தில் முகாமிட்டிருக்கும் கடற்படை (Naval Army) யினரின் உண்மை சொரூபம் இது. கடந்த 22-3-91 அன்று கடற்படையினர் 5 பேர் போதையும் கும்மாளமுமாக ஒரு வீட்டினுள் புகுந்து ஒரு பெண்ணை மானபங்க படுத்த முயன்றனர். அப்பெண் கூச்சல் போடவே அக்கம்பக்கத்தார் ஓடிவந்தனர். அதற்குள் நாலுபேர் ஓடிவிடவே ஒருவன் மாட்டிக்கொண்டான் அவனை நையப்புடைத்து போலீசிடம் ஒப்படைத்தனர். போலீசோ எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அவனை விட்டுவிட்டது.

இதுபோல் இதற்குமுன் பலசம்பவங்கள் இங்கு நடந்துள்ளன. பாம்பன் அருகேயுள்ள சின்னப்பாலத்தைச் சேர்ந்த பெண்கள் குருசடைத்தீவில் கடற்பாசி எடுக்கச் சென்றபோது அங்கு 'ரோந்து' பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அவர்களிடம் தகாத முறையில் நடந்து கொண்டதோடு துப்பாக்கியாலும் தாக்கினார்கள். கடற்படை முகாமில் புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. எனவே, பாம்பன் முழுவதும் கடற்படையினருக்கு எந்தப் பொருளும், பொட்டுத் தண்ணீரும் கொடுக்காமல் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதைப் பொறுக்க முடியாத கடற்படை தலைமை, சிப்பாய்களை தூண்டிவிடவே கடைகளை தாக்கினர்; பொருட்களை அள்ளிச்சென்றனர்; ஊரையே அழித்து விடுவதாக மிரட்டினர்; இன்னும் பலவாறாகவும் மிரட்டி கிராம மக்களை பணிய வைத்தனர்.

இதே மாதிரி ஒருமுறை தனுஷ்கோடியில் மீன் பிடிக்கும் மீனவ பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொண்டனர். வீட்டிலிருந்த பெண்களை துப்பாக்கி காட்டி மிரட்டி வெளியே இழுத்துச் செல்ல முயன்றனர். ஒவ்வொரு முறையும் பகுதி மக்களே

**மிருகங்களிடம் அதிகாரம்: எல்லைப் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்ட விவசாயிகள்.**



www.padippakam.com

## பத்திரிக்கை செய்தி:

# சர்வதேசப் புரட்சிக்கான ஆக்கபூர்வ பங்களிப்பு!

இன்றைய உலக நிலைமைகளை ஆய்வு செய்து சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர கடமைகளை வகுப்பதற்காக மாநில அமைப்புக் கமிட்டி, இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)யின் தமிழ்நாடு அமைப்பின் 5வது பிளீனம் கடந்த மார்ச் 29 - 31 ஆகிய நாட்களில் தோழர் அப்பு அரங்கில் எழுச்சிகரமாகவும் வெற்றிகரமாகவும் நடந்து முடிந்துள்ளது.

1980களின் இறுதியில் உலகின் பல்வேறு நாடுகளின் அரசியல், பொருளாதார, இராணுவத் தகுதி நிலைகள், உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கற்றறிந்து, பகுத்தாய்ந்து புதிய கோட்பாட்டு முடிவுகள், கடமைகளை வகுப்பதற்காகவே இப்பிளீனம் கூடியது.

இந்த நோக்கத்திற்கென இரண்டு அறிக்கைகள் முன்வைக்கப்பட்டு கட்சி முழுவதும் உட்கட்சி விவாதம் நடந்தது; பிளீனத்திற்கான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அவர்களுடன் கட்சியின் முழு நேரப் புரட்சியாளர்களும் கலந்து கொண்ட பிளீனம் நடந்தது. மிகவும் ஆரோக்கியமாகவும், ஆக்கபூர்வமாகவும் ஜனநாயக பூர்வமாகவும் நடந்த இவ்விவாதத்தின் இறுதியில் ஒரு அறிக்கை பிளீனத்தால் ஏகமனதாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்றப்பட்டது.

மூலதனமும் உற்பத்தியும் சர்வதேசியமயமாவதன் காரணமாகவும், உலகு தழுவிய உழைப்புப் பிரிவினையின் அடிப்படையிலும் தோன்றி வளர்ந்துவிட்ட தேசங்கடந்த மற்றும் பன்னாட்டு தொழிற் கழகங்களும், தேசங்கடந்த வங்கிகளும் உலகப் பொருளாதார மேலாதிக்கத்தை நிறுவுகின்றன. அவற்றுக்கான உலக மேலாதிக்கத்திற்காக அமெரிக்கா, ரசியா ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகளுக்கிடையில் போட்டியும், முரண்பாடும், பனிப்போரும், பதிலிப் போர்களும் நடத்துவந்தன.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் முன்னாள் சோசலிச நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகள் நடந்துள்ளன. உலக மேலாதிக்க மேல்நிலை வல்லரசான அமெரிக்காவும் அதனுடன் உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் ஈடுபட்டிருந்த ருசிய மேல்நிலை வல்லரசும் பொருளாதார ரீதியில் பின்னடைவுக்குள்ளாயின.

அமெரிக்க, ரசிய மேல்நிலை வல்லரசுக்கு போட்டியாக பொருளாதார ரீதியிலான மேல்நிலை வல்லரசுகளாக ஐரோப்பியப் பொருளாதார சமூகம் குறிப்பாக ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகியன வளர்ந்து அரசியல் - ராணுவ ரீதியில் விரிவுபடுத்தும் முயற்சியில் உள்ளன. அமெரிக்கா, ரசியா, ஐரோப்பிய பொருளாதார சமூகம் குறிப்பாக ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய இந்நான்கு மேல்நிலை வல்லரசுளும் உலகை மூன்று வர்த்தக வளையங்களாக்கிக் கூறு போட்டுக் கொண்டு பொருளாதார ஆதிக்கத்துக்கும், சுரண்டலுக்குமான போட்டியில் இறங்கியுள்ளன. பின்தங்கிய நாடுகளுக்குள்ளேயே சில பிராந்திய ஆதிக்கத் துணை வல்லரசுகளைத் தோற்றுவித்து சர்வதேசியமயமாக்கும் தமது உலகப் பொருளாதாரக் கட்டமைவின் பிராந்திய அடிவருடிகளாக மாற்றியுள்ளன.

அதே சமயம் அமெரிக்கா, ரசியா ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகள் உட்பட இன்றைய உலகின் பல்வேறு நாடுகளும் மீள முடியாத பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியுள்ளன. இதன் காரணமாக ஒரு புதிய உலகப் பொருளாதார ஒழுங்கமைப்பைக் கொண்டு வந்து உலகை மறுபங்கீடு செய்வதற்கான மேல்நிலை வல்லரசுகளுக்கு இடையிலான போட்டி அரசியல், ராணுவ ரீதியிலான முரண்பாட்டிற்கும் இட்டுச் செல்கிறது. அதே சமயம் அவை ஒன்றுபட்டு பின்தங்கிய நாடுகளை ஒடுக்கவும் செய்கின்றன.

ஆகவே மேல்நிலை வல்லரசுகள் ஒரு முகாமாகவும், அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகள் இன்னொரு முகாமாகவும் இன்றைய உலகு பிளவுபட்டிருக்கிறது. மேல்நிலை வல்லரசுகளுக்கு எதிராக குறிப்பாக அமெரிக்க மேல்நிலை வல்லரசைப் பிரதான இலக்காகக் கொண்டு எதிர்த்து முறியடிக்க வேண்டிய மேலாதிக்க எதிர்ப்பில் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கமும் அய்க்கியப்பட வேண்டும். மேல்நிலை வல்லரசுகளால் ஊட்டி வளர்க்கப்படும் பிராந்தியத் துணை வல்லரசுகள் மற்றும் பிராந்திய அரசுகளுக்கிடையிலான பிற்போக்குக் கூட்டுக்களை அப்பிர்ர்ந்திய பாட்டாளி வர்க்க அமைப்புகள் ஒன்றுபட்டு எதிர்த்து முறியடிக்க வேண்டும்.

இவ்வாறு பாட்டாளி வர்க்கத்தினர் சர்வதேசக் கடமைகளை வகுத்துக் கொள்வதற்கான புதியதோர் வழியை பிளீனம் முடிவெடுத்தது. இதன்மூலம் இந்தியப் பாட்டாளி வர்க்க, மார்க்சிய - லெனினிய இயக்கத்தில் முன்முயற்சியுடன் இத்தகையதோர் விவாதமும், முடிவுகளும் மேற்கொண்டதன் மூலம் இப்பிளீனம் ஆக்கபூர்வமான ஒரு பங்களிப்பை வழங்கியுள்ளது.

மேல்நிலை வல்லரசுகளுக்கிடையிலான அரசியல், பொருளாதார, இராணுவ முரண்பாடுகளை பகைநீக்கம், படைகுறைப்பு, ஆயுதக்குறைப்பு ஆகியவற்றின் மூலமாக தீர்ப்பது; பல துருவ - மையங்களாக உலகை மாற்றி சமத்துவமான உலகு தழுவிய முன்னேற்றம், நல்லிணக்கத்தை அடைந்துவிட முடியும் என்ற கோர்பச்சேவ், தெங்-சியோ-பெங் போன்ற சர்வதேச திருத்தல்வாதிகளின் சமரச முயற்சிகளை இப்பிளீனம் அம்பலப்படுத்துவதாக அமைந்தது. லெனின், மாவோ ஆகியோரது முந்தைய ஆய்வுரைகளையே வரட்டுத்தனமாக உச்சாடனம் செய்யும் போலிப் புரட்சியாளர்களின் தவறான கண்ணோட்டங்களை முறியடிக்க வல்லதாக இப்பிளீன முடிவுகள் அமைகின்றன.

மூன்று நாட்கள் இரவு பகலாக நடந்த இந்தப் பிளீனத்தின் விவாதத்தில் மிகுந்த உற்சாகத்தோடும், உணர்வுபூர்வமாகவும், ஈடுபாட்டோடும் பிரதிநிதிகள் பங்கேற்றனர். பாட்டாளிவர்க்க இலட்சியத்தின் மேலும் ஒரு முன்னேற்றகரமான அத்தியாவசியமான அடியை முன்னெடுத்து வைத்து தமது புரட்சிகரப் பணியைத் தொடர பிளீனப் பிரதிநிதிகள் உறுதி எடுத்துக் கொண்டனர்.

இவண்,
பிளீனக் கமிட்டி,
மாநில அமைப்பு கமிட்டி,
இந்திய பொதுவுடமைக் கட்சி (மா - லெ)

தலையிட்டு தடுத்து தற்காத்து கொண்டுள்ளனர்; தற்காத்து கொண்டு வருகின்றனர்!

● ● ●

சிறப்பு காவல் படையினர் முதல் மத்திய ரிசர்வ் போலீசு படை, எல்லை பாதுகாப்புப் படை, தேசிய பாதுகாப்புப் படை, கப்பற் படை வரை அனைத்து தெண்டச் சோற்றுப் பட்டாளமும் இதையேதான் செய்கின்றன

அண்மையில்கூட (பிப்ரவரி 23, 24 தேதிகளில்) காஷ்மீர் - குனான் போஸ் போரா கிராமத்தில் 23 பெண்களை எல்லை பாதுகாப்புப் படையினர் கும்பல் கும்பலாக கற்பழித்த கொடுமை நடந்தது. எவ்வளவோ ஆதாரங்கள் இருந்தும், அத்தனையையும் மறைத்துவிட்டு இது தீவிரவாதிகளால் கிளப்பப்பட்ட புரளி எனக்கூறி கிடப்பில் போட்டுவிட்டனர்.

ராணுவம் என்றால் ....தேசப்பற்றுள்ளவர்கள், சொந்தம் பந்தங்களை விட்டு பிரிந்து வந்து தமது வாழ்க்கையையே நாட்டுக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்கள், மிகுந்த கண்டிப்பிலும்,கட்டுப்பாட்டிலும் பயிற்சி பெற்ற ஒழுக்கச் சீலர்கள், வெயில் - மழை - பனிபாராது உழைக்கும் கடும் உழைப்பாளிகள் என்றுதானே இன்னும் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்குச் சொல்லி வையுங்கள். ஆட்டையும், மாட்டையும் திருடும் அற்பர்கள்தான் ராணுவத்தினர் என்று! கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சூறையாடல் போன்றவையே இந்திய ராணுவத்தின் தொழிலாகி விட்டது என்று!

'அய்யய்யோ.... காலம் கெட்டுவிட்டது;வேலியே பயிரை மேய்கிறது' என்று யாராவது புலம்பினால் 'பயிரை மேய்வதற்கென்றே பயிற்சி அளிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட வேலிகள் இவை' எனக் கூறி வாயடையுங்கள்! இவற்றை வேரோடு பிடுங்கி எறியும் வரை நம்மை இப்படித்தான் ரணப்படுத்திக் கொண்டிருக்கும் என அறிவியுங்கள்! ●



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்க - இஸ்ரேல் கூட்டுச் சதி



**பாலஸ்தீன மக்களின் உண்மையான பிரதிநிதி யார் என்று தீர்மானிப்பதற்கோ, சதாமை ஆதரித்ததற்காக அராபத்தை சாடுவதற்கோ, நாடுகளின் இறையாண்மையைப் பற்றி உபதேசிப்பதற்கோ அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் என்ன அருகதை இருக்கிறது?**

வளைகுடாப் போரின் அமெரிக்கா வெற்றி பெற்றதன் விளைவாக பாலஸ்தீன மக்களின் பிரச்சினை மேலும் சிக்கலாகியிருக்கிறது. வளைகுடாப் போரில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத், சதாம் உசேனை ஆதரித்ததன் காரணமாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஓ) அரபு நாடுகளின் மத்தியில் தனிமைப்பட்டு விட்டதென்றும் பாலஸ்தீன மக்கள் சார்பாகப் பேச்சுவார்த்தை நடத்தும் தகுதியை அது இழந்துவிட்டது என்றும் அமெரிக்கா கூறியது. பிரச்சினையைத் தீர்க்க விரும்பும் நியாயவான் போல இஸ்ரேலிய பிரதமர் ஷமீர் பேசினார். இதே கருத்தை மேற்கத்திய பத்திரிக்கைகளும் பிரச்சாரம் செய்தன. அராபத் ஈராக்கை ஆதரித்ததன் தொடர்ச்சியாக பி.எல்.ஓ.விற்குள் பெரும் கொந்தளிப்பு உருவாகியிருப்பதாக அமெரிக்க அயலுறவுத்துறை புளுகியது. பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஈராக்கை ஆதரித்ததையே காரணமாகக் காட்டி குவைத்தில் வேலையாட்களாகவும், தொழிலாளிகளாகவும், ஊழியர்களாகவும் உள்ள இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்களுக்கு எதிராக மற்ற குவைத்தியர்களை இஸ்ரேலும் அமெரிக்காவும் தூண்டி விடுகின்றன. இதன் மூலம் பாலஸ்தீன விடுதலை அமைப்பின் மீது வெறுப்பு கொள்ளவும் அதற்கெதிராகத் திரும்பவும் குவைத்தில் வாழும் பாலஸ்தீன மக்களை நெருக்கடிக்குள்ளாக்குகின்றன.

பல்வேறு பாலஸ்தீன விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பான பி.எல்.ஓவைப் பிளவுபடுத்துவதற்கான முயற்சிகளும் நடந்தன, நடக்கின்றன. இவையனைத்தையும் மீறி எல்லா பாலஸ்தீன விடுதலை அமைப்புகளும் தங்களின் பிரதிநிதி யாசர் அராபத் மட்டுமே என்று உறுதியாக அறிவித்துள்ளன.

சதாம் உசேனை அராபத் ஆதரித்தது தொடர்பாக உலகெங்கும் கேள்விகள் எழுந்தவுடன், தாங்கள் சதாமின் பிராந்திய விரிவாக்கக் கொள்கையை கண்டிப்பதாகவும் அதே நேரத்தில் வளைகுடாவில் அமெரிக்கா தலையிடுவதையும் ஈராக் மீதான அதன் ஆக்கிரமிப்பையும் எதிர்ப்பதாகவும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ' தூதரக அதிகாரிகள் விளக்கமளித்தனர். அமெரிக்க எதிர்ப்புணர்வின் அடிப்படையில் சதாம் உருவாக்க முயன்ற 'அரபு தேசிய' உணர்வின் அடிப்படையிலேனும் தங்களது பிரச்சினைக்கு ஒரு விடிவு தோன்றாதா என அராபத் சிந்தித்ததன் விளைவுதான் பி.எல்.ஓ.வின் மேற்கூறிய நிலைப்பாட்டுக்குக் காரணம்.

ஆனால் பாலஸ்தீனப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதில்தான் வளைகுடாவில் அமெரிக்க நலனின் அடிப்படை ஒளிந்திருக்கிறது. வளைகுடாவில் சமாதானம் நிலவவொட்டாமல் தடுக்கவும் பதட்ட நிலையை எப்பொழுதும் நீடிக்கச் செய்யும் தனது அடியாளாக அமெரிக்கா இஸ்ரேலைப் பராமரிக்கிறது. ராணுவ, நிதி உதவிகளின் மூலம் இஸ்ரேலின் வலிமையை அதிகரிக்கச் செய்கிறது. இன்னொரு புறம் எண்ணெய் உற்பத்தி செய்யும் அரபுநாடுகளை தொழில்நுட்ப வியாபார ஒப்பந்தங்களின் மூலம் தன்னுடனும், பிற மேலை ஏகாதிபத்தியங்களுடனும் அமெரிக்கா இறுகப் பிணைத்து வைத்திருக்கிறது.

இஸ்ரேலின் ஜியோனிச (யூதவெறி) அபாயத்தைக் கண்டு அராபிய ஷேக்குகள் அஞ்சுகின்றனர். அதை எதிர்த்துப் போராடும் பாலஸ்தீன மக்களைக் கண்டும் அஞ்சுகின்றனர். இஸ்ரேலின் ராணுவ வலிமை ஷேக்குகளை அச்சுறுத்துகிறது என்றால் பாலஸ்தீன மக்களின் ஜனநாயக உணர்வு அவர்களை கிலி கொள்ள வைக்கிறது. தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாக போராட்ட உணர்வும், ஜனநாயக உணர்வும் பெற்றுள்ள பாலஸ்தீன தொழிலாளிகளும், அறிவு ஜீவிகளும் இஸ்லாமிய மதக் கோட்பாட்டின் அடிப்படையிலான அடிமைத் தனங்களை பெரும்பாலும் உதறிவிட்டனர். ஒரு வேளை அவர்களுக்கென ஒரு தாயகம் ஏற்படுமானால் அது மதசார்பற்ற ஜனநாயக நாடாக இருக்கும் என்பதும், அதன் எதிரொலியாக தமது நாடுகளில் மக்கள் எழுச்சிகள் தோன்றும் என்பதும் அராபிய ஷேக்குகளுக்கு பாலஸ்தீனத்தின் மேல் வெறுப்பு வரக் காரணம்.

இந்தச் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அராபியர்களுக்கும், யூதர்களுக்கும், பாலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குமிடையே நடுவ

படிப்பகம்

www.padippakam.com

ராக இருந்து அமைதி ஏற்படுத்த முயல்வது போல அமெரிக்கா நடிக்கிறது.

இன்டிபதா எனும் மக்கள் எழுச்சி தீவிரமடையத் தொடங்கியவுடன் இஸ்ரேலின் யூத வெறியர்கள் பீதியடைந்தனர். ஆயுதம் தாங்கிய கொரில்லாக்கள் சிலரின் தாக்குதலை சமாளிப்பது என்ற நிலை மாறியது. பாலஸ்தீன மக்கள் வாழும் பகுதிகளில் கட்டாய யூதக் குடியேற்றத்தை எதிர்த்து ஆங்காங்கே பாலஸ்தீன மக்கள் யூத வெறியர்களைத் தாக்கத் தொடங்கினர். இந்தத் தாக்குதலில் 13 வயதுக்குட்பட்ட பாலஸ்தீன சிறுவர்கள்தான் முன்னணியில் நின்றனர். தாக்குதலுக்கான ஆயுதம் கல். ஓடுகின்ற போலீஸ், ராணுவ வாகனங்கள் மீதும் கார்களின் மீதும் திடீர் திடீரென கற்கள் பறந்து வந்து தாக்கின. தாக்குதலை நடத்திய சிறுவர்கள் நொடிப் பொழுதில் ஓடி மறைந்தனர்.

ராணுவத்தின் எண்ணிக்கையை அதிகரித்தும் கூட யூதவெறி அரசால் இவ்வெழுச்சியை அடக்க இயலவில்லை. சலுகை விலையில் வீடு, கடன், துப்பாக்கி அனைத்தும் கொடுத்த போதும் பாலஸ்தீன பகுதிகளில் யூதர்கள் குடியேறத் தயங்கினர். கல்லடி வாங்கிய பகுதியில் உள்ள பாலஸ்தீனக் குடியிருப்புகள் மொத்தத்தையும் இடித்துத் தரைமட்டமாக்குவது, ஆயிரக் கணக்கில் இளைஞர்களையும் சிறுவர்களையும் கைது செய்து சிறையிலடைப்பது, திடீர் திடீரென்று ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து ராணுவத் தாக்குதல் நடத்துவது போன்ற பல முறைகளைக் கையாண்ட பின்னரும் எழுச்சியை அடக்க இயலவில்லை.

மாறாக இவை விபரீதமானதொரு எதிர்விளைவைத் தோற்றுவித்தன. இஸ்ரேலிய சித்திரவதை முகாம்களிலிருந்து விடுபட்டவர்கள் **ஹமாஸ்** என்ற இஸ்லாமிய மதவாத அமைப்பில் சென்று இணைந்தனர். மதசார்பற்ற ஜனநாயக அமைப்பான பாலஸ்தீன விடுதலை முன்னணியை உடைப்பதற்காகவே இஸ்ரேல் அரசால் மறைமுகமாக, வளர்த்துவிடப்பட்ட அமைப்பு இது. இஸ்ரேல் ஒரு நாடு என்பதையேனும் பி.எல்.ஓ. அங்கீகரிக்கிறது. ஆனால், இஸ்ரேல் என்ற நாட்டையே ஏற்க மறுப்பதுடன் மீண்டும் யூதர்களை நாடோடிகளாக விரட்ட வேண்டும் என்கிறது, ஹமாஸ்.

**இஸ்ரேலிய ராணுவ வாகனத்தின்மீது கல்லெறிந்து கொண்டிருந்த ஒரு சிறுவனிடம், ''அவர்கள் உன்னைக் கொன்று விடுவார்களே, உனக்கு பயமாக இல்லையா?'' என்று கேட்டாராம் ஒரு அமெரிக்க நிருபர். ''இழந்து விடுவோமோ என்று வருந்துமளவுக்கு எங்கள் வாழ்க்கை இனிமையாக இல்லை'' என்று பதிலளித்தானாம் அந்தச் சிறுவன்.**

உலகளவில் இஸ்ரேலுக்கு எதிராக வளர்ந்த பொதுக் கருத்தும், உள்நாட்டு மக்களிடையே (யூதர்கள்) கணிசமான பிரிவினர் சமாதானத்திற்காகக் குரல் கொடுக்கத் தொடங்கியதும் இஸ்ரேல் அரசுக்கும் அதற்கு முட்டுக் கொடுத்து வரும் அமெரிக்காவிற்கும் ஏதேனும் ஒரு வகையில் பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கின. 1988ல் டுனிஸ் நகரில் அமெரிக்காவுக்கும், பி.எல்.ஓ.வுக்குமிடையே பேச்சுவார்த்தை தொடங்கியது.

இஸ்ரேல் தான் ஏற்றுக் கொண்ட ஐ.நா. தீ
மானங்களுக்கு எதிராக திமிர்த்தனத்துடன்
பேசியது. பி.எல்.ஓ. இவையெதையும் ஏற்
மறுத்தது. ஐ.நா. தீர்மானத்தை அமல் படு
தக் கோரியது.

நடுவர் போல நாடகமாடிய அமெ
ரிக்கா பேச்சு வார்த்தையை முறிப்பதற்கா
சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தது
மே '90 இல் பி.எல்.ஓ.வின் உறுப்பினரா
பாலஸ்தீன விடுதலை முன்னணி (PLF
இஸ்ரேல் கடற்கரையில் ராணுவ அதிகா
கள் மீது ஒரு தாக்குதல் நடத்தியது. இதி
இஸ்ரேலியர்கள் யாரும் கொல்லப்ப
வில்லை. மாறாக பாலஸ்தீனர்கள் மூவ
கொல்லப்பட்டனர்; பன்னிரெண்டு பே
சிறை பிடிக்கப்பட்டனர். இதையே காரண
மாகக் காட்டி பேச்சுவார்த்தையை முறித்த
அமெரிக்கா.

பாலஸ்தீன மக்கள் மீது மேலும் குரூ
மான அரசு பயங்கரவாத அடக்குமுறை
இஸ்ரேல் கட்டவிழ்த்துவிட்டது. சென்
இரண்டே ஆண்டுகளில் 900 பாலஸ்தீனிய
கள் கொல்லப்பட்டனர்; 40,000 பேர் விசா

## பாலஸ்தீன வரலாறு

*சிலுவைப் போரின் போது கிறித்தவர்களால் விரட்டப்பட்ட யூதர்கள் தங்கள் தாயகத்தை (இன்றைய இஸ்ரேல்) விட்டோடி பல்வேறு நாடுகளில் குடியேறினார்கள். இஸ்லாமின் தோற்றத்துக்குப் பின் அந்த இடம் முஸ்லீம்களின் தாயகமானது. பிறகு வெகுநாளைக்குப் பிறகு, 19-ம் நூற்றாண்டில் உலகின் பல பகுதிகளில் தோன்றிய 'ஜியோனிசம்' என்ற யூத மதவெறி ''இஸ்ரேல் மீண்டும் யூதர்களுக்கே'' என்று கோரியது.*

*இரண்டாம் உலகப்போருக்கு முன் ஜெர்மனியிலும் ஐரோப்பாவிலும் தோன்றிய யூத எதிர்ப்பு இயக்கங்கள், இட்லர் நடத்திய யூதப் படுகொலை ஆகியவற்றின் காரணமாக யூதர்களுக்கென ஒரு நாடு அமைத்துக் கொடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1948-இல் இஸ்ரேல் உருவானது. தோன்றிய நாளிலிருந்து பாலஸ்தீன மக்களை அவர்களது சொந்த மண்ணிலிருந்து விரட்டியும், படுகொலை செய்தும் அமெரிக்காவின் ஆதரவுடன் தனது நாட்டை விரிவுபடுத்தி வருகிறது இஸ்ரேலின் யூதவெறி அரசு.*

*1967-இல் அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் நடைபெற்ற போரில் பாலஸ்தீனர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு ஜெருசலேம், மேற்குக் கரை, காசா எல்லைக்கோடு, எகிப்துக்குச் சொந்தமான சினாய் தீபகற்பம், சிரியாவுக்கு சொந்தமான கோலான் குன்றுகள் ஆகிய பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துப் பிடித்துக் கொண்டது. இஸ்ரேல் தான் ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து உடனே வெளியேற வேண்டுமென 1967 நவம்பரில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் நிறைவேற்றியது. அமெரிக்கா சிபாரிசு செய்த போர் நிறுத்தத்துக்கு ஜூன்'70 இல் இஸ்ரேல் ஒப்புக் கொண்டது. எனினும் ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து வெளியேறவில்லை.*

*இதனிடையே இஸ்ரேலின் தாக்குதல், அமெரிக்க அடிவருடியாக இருந்த ஜோர்டான் மன்னன் உசேனின் தாக்குதல் பிற அரபுநாடுகள் பலவற்றின் துரோகம் ஆகியவற்றினூடாக காலூன்ற இடமில்லாத நிலையிலும் தொடர்ந்து போராடி உலக மக்களின் ஆதரவைப் பெற்றது, பாலஸ்தீன விடுதலை முன்னணி. 1974-இல் வேறு வழியின்றி பாலஸ்தீன விடுதலை முன்னணித் தலைவர் யாசர் அராபத்திற்கு ஒரு அரசுத் தலைவருக்கு உரிய அந்தஸ்தை அளித்து பாலஸ்தீன பிரச்சினை பற்றிப் பேச ஐ.நா. மன்றம் அனுமதிக்க வேண்டியதாயிற்று.*

*1979-இல் பாலஸ்தீன மக்களை நட்
டாற்றில் விட்டுவிட்டு எகிப்து அதிபர் சதாத்
இஸ்ரேலுடன் ஒப்பந்தத்துக்கு வந்தார்
சினாய் தீபகற்பத்தைத் திரும்பப் பெற்றார்
அடுத்த இரண்டே ஆண்டுகளில் இஸ்ரேல்
லெபனானனைத் தாக்கி அதன் ஒரு பகு
தியை ஆக்கிரமித்தது.*

*ஆக்கிரமித்த பகுதிகள் அனைத்திலும்
யூதர்கள் குடியேற்றப்பட்டனர். அரபு நாடு
கள் பலவற்றாலும் முன்வைக்கப்பட்ட சமா
தான யோசனைகளனைத்தையும் அமெரிக்
காவின் ஆதரவுடன் இஸ்ரேல் நிராகரித்தது
இதுநாள் வரை ஏதேனும் ஒரு அரபு நாட்
டைச் சார்ந்து நின்று சர்வதேச அரங்கில் த
பிரச்சினையை முன்வைத்து வந்த பாலஸ்
தீன விடுதலை முன்னணி நவம்பர்'88-இல்
தற்போது இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் கீழ்
இருக்கும் தங்கள் தாயகத்தை சுதந்தி
பாலஸ்தீன அரசாக அறிவித்தது.*

*தாய்நாடு என்று ஒன்று இருந்து அதில்
பிறந்து வளர்ந்து, பின் தம் கண்ணெதி
லேயே அதை இஸ்ரேலுக்குப் பறிகொடுத்து
பின்னர் அதை மீட்பதற்காகப் போராடி வரு
கிறது ஒரு தலைமுறை; இந்தத் தலைமுறை
தன் இறுதிக் காலத்தில் இருக்கிறது. சிறுவர்க
ளும் இளைஞர்களுமாக புதிய தலைமு
றைக்கு இன்று போராட்டம் கைமாறியிருக்கி
றது. அதன் வெளிப்பாடுதான் 'இன்டிபா
தா' (Intifada) என்ற 'மக்கள் எழுச்சி' '87
இறுதியில் துவங்கிய எழுச்சி இன்னும்
தொடர்கிறது.*



படிப்பகம்

www.padippakam.com



'இண்டிபதா' இயக்கச் சிறுவர்கள்; தேச விடுதலை வீரர்கள்.

ணையின்றி சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

1919 இல் இன்றைக்கு இஸ்ரேல் என்ற ழைக்கப்படும் நிலப்பகுதியில் 2 சதவீதம் மட்டுமே யூதர்கள் வசிக்கும் பகுதியாக இருந்தது. அன்றைய மக்கள் தொகையில் யூதர்கள் 9.7 சதவீதம் மட்டுமே. 1947 இல் யூதர்களின் மக்கள் தொகை 30 சதவீதமாக வும் அவர்களது குடியிருப்புப் பகுதி 8 சதவீ தமாகவும் உயர்ந்தது. 1947 வரை மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக இருந்தவர்களும், நாட்டின் பெரும்பகுதி நிலப் பரப்பின் உடைமையாளர்களாகவும் இருந்த பாலஸ்தீனியர்களை அவர்களின் தாயகத்திலிருந்து சிறிது சிறிதாக வெளி யேற்றியது யூதவெறி அரசு.

ஒண்டுவதற்குத் துண்டு நிலமின்றி நாட் டின் எல்லைக்கு (காசா எல்லைக்கோடு, மேற்குக் கரை) ஒதுங்கினர் பாலஸ்தீன மக் கள். அப்பகுதியையும் ஆக்கிரமித்துக் கொண்ட இஸ்ரேல் அங்கேயும் யூதர்களைக் குடியேற்றுகிறது; உலகெங்கும் உள்ள யூதர் களை இஸ்ரேலுக்கு அழைக்கிறது. ரசியாவி லிருந்து யூதர்களை இஸ்ரேலில் குடியேற அனுமதிப்பது என்ற கோர்ப்பசேவின் புதிய முடிவின் காரணமாக லட்சக்கணக்கான யூதர்கள் ரசியாவிலிருந்து இஸ்ரேலுக்குக் குடிபெயர்கின்றனர். பாலஸ்தீனப் பகுதியில் இவர்களைக் குடியேற்றுவதற்கான செலவு களை ஈடுகட்ட இஸ்ரேலுக்கு அமெரிக்கா நிதி உதவி செய்துள்ளது. மாஸ்கோவிற்கும் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவுக்கும் இடையே நேரடி விமானப் போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது. 6 ஆண்டுகளில் ஏழரை லட்சம் யூதர்கள் ரசியாவிலிருந்து மட்டும் உருவாவார்கள் என எதிர்பார்க்கி து இஸ்ரேல் அரசு. ஆக்கிரமித்த பாலஸ்தீ னப் பகுதிகளை இஸ்ரேலின் பகுதிதான் என்று பகிரங்கமாக அறிவித்ததன் மூலம் இஸ்ரேலின் ஆளும் பாசிச லிகுட் கட்சி யின் பிரதமர் ஷமீர் ஐ.நா.வின் தீர்மானங்க ளைக் கேலிக் கூத்தாக்கியுள்ளார்.

இத்தகைய வலிந்த குடியேற்றங்களின் மூலம் குடியேறியவர்களுக்கும் பாலஸ்தீன மக்களுக்குமான மோதலை தோற்றுவித்து பாலஸ்தீனர்களை நிரந்தர ஊரடங்கின் கீழ் வைப்பது அல்லது நாட்டை விட்டே ஓடச் செய்வது; சிறிது சிறிதாகக் குடியேற்றி பின் னர் அவர்களையே பாரம்பரியக் குடிமக்க ளாகச் சித்தரிப்பது; பாலஸ்தீன மக்களுக் கென ஒரு தாயகம் இல்லை என்றாக்குவது வையே யூத வெறியர்களின் நோக்கம்.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேலால் குப்பைத் தொட்டியில் வீசப் பட்ட ஐ.நா. தீர்மானம் பற்றிபேச வக்கற்ற அமெரிக்கா, தற்போது ''ஐ.நா. தீர்மா னத்தை மீறிய ஈராக்கிற்கு அராபத் ஆதரவ ளித்ததனால், பி.எல்.ஓ. பாலஸ்தீன மக்கள் சார்பாகப் பேசும் தகுதியை இழந்துவிட்டது என்று 'நியாயம்' பேசுவது விந்தைதான். அமெரிக்க - இஸ்ரேல் கூட்டணி எவ்வளவு தான் முயன்றும் பாலஸ்தீன மக்கள் மத்தியி லிருந்து ஒரு வரதராஜ பெருமாளை உரு வாக்க இயலவில்லை. வேறு வழியின்றி ''உங்கள் பிரதிநிதியை நீங்களே தெரிவு செய்து கொள்ளுங்கள்'' என்று அமெரிக்கா பி.எல்.ஓ.வை ஒப்புக் கொள்ள வேண்டிய தாயிற்று.

தற்போது ஜெருசலேம் நகரில் அமெ ரிக்க அரசுச் செயலர் ஜேம்ஸ் பேக்கரை சந் தித்த பி.எல்.ஓ.வின் பிரதிநிதிக் குழு கீழ்க் கண்டவாறு தனது கோரிக்கைகளை முன் வைத்தது. ● பாலஸ்தீன மக்களின் சுயநிர் ணய உரிமையை அங்கீகரிப்பது ● பாலஸ்தீன அரசை ஏற்பது ● பி.எல்.ஓ. மட்டுமே பாலஸ்தீன மக்க ளின் உண்மையான பிரதிநிதி என ஏற்பது ● ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் யூதக் குடியேற்றத்தை நிறுத்துவது ● அராபியர் கள் மிகுதியாக வாழும் கிழக்கு ஜெருசலே மில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை தடுப்பது ● எல்லா அரசியல் கைதிகளையும் விடு விப்பது ● வெளிநாடுகளிலிருந்து யூதர் களை 'இறக்குமதி' செய்வதைத் தடுப்பது ● ஐ.நா. தீர்மானங்கள் அனைத்தையும் அமல் செய்வது.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேலால் குப்பைத் தொட்டியில் வீசப்பட்ட ஐ.நா. தீர்மானம் பற்றி பேச வக்கற்ற அமெரிக்கா, தற்போது ''ஐ.நா. தீர்மானத்தை மீறிய ஈராக்கிற்கு அராபத் ஆதரவளித்ததனால், பி.எல்.ஓ. பாலஸ்தீன மக்கள் சார்பாகப் பேசும் தகுதியை இழந்துவிட்டது'' என்று 'நியாயம்' பேசுவது விந்தைதான். அமெரிக்க - இஸ்ரேல் கூட்டணி எவ்வளவு தான் முயன்றும் பாலஸ்தீன மக்கள் மத்தியிலிருந்து ஒரு வரதராஜ பெருமாளை உருவாக்க இயலவில்லை.

இந்தக் கோரிக்கைகளை இஸ்ரேல் நிரா கரித்து விட்டது. உலகின் 91 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பாலஸ்தீன அரசைத் தான் ஏற்க இயலாதென்றும் தனது ராணுவ கட்டுப்பாட்டின் கீழ் 'மாநில சுயாட்சி' வழங் குவதாகவும் கூறுகிறது. பாலஸ்தீன பிரச் சினை பேச்சுவார்த்தையில் தீர்வதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

தனது விடுதலைக்கான நேச சக்திக ளாக அரபு நாடுகளை நம்பி மீண்டும் ஏமாறு வதற்கு பி.எல்.ஓ. தயாராக இல்லை. தங்கள் சார்பில் வேறெந்த அரபு நாடும் பேசத் தேவையில்லை என்றும் மற்ற அரபு நாடுக ளுக்கும் அமெரிக்கா, இஸ்ரேலுக்கும் உள்ள பிரச்சினையுடன் பாலஸ்தீன மக்களின் பிரச் சினையை இணைக்க வேண்டாம் என்றும் தெளிவு படுத்திவிட்டது.

எகிப்தை மற்ற அரபு நாடுகளிடமி ருந்து பிரித்து இஸ்ரேலுடன் காம்ப் டேவிட் ஒப்பந்தம் போட வைத்ததைப் போல கோலான் குன்றுகள் விவகாரத்தில் சிரியா வுக்கும் இஸ்ரேலுக்கும் தனியே உடன்ப டிக்கை ஏற்படுத்த அமெரிக்கா முயல்கிறது. ஆனால், அதற்கு முன்னரே கோலான் குன்று களில் 1100 குடியிருப்பு வளாகங்களை உரு வாக்கி வெளிநாட்டிலிருந்து வரும் யூதர் களை அங்கே குடியேற்றப் போவதாக இஸ் ரேலின் வீட்டு வசதித்துறை அமைச்சர் அறி வித்துவிட்டார்.

அமெரிக்காவின் நயவஞ்சகமும் இஸ் ரேலின் அடக்குமுறையும் இந்த லட்சோப லட்சம் வேதனைக் குரல்களை நசுக்கிவிட முடியாது. பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் வென்றே தீரும். இது சம்பிரதா யமான நம்பிக்கையூட்டும் வாசகமல்ல. இஸ்ரேலிய ராணுவ வாகனத்தின்மீது கல் லெறிந்து கொண்டிருந்த ஒரு சிறுவனிடம் ''அவர்கள் உன்னைக் கொன்று விடுவார் களே, உனக்கு பயமாக இல்லையா?'' என்று கேட்டாராம் ஒரு அமெரிக்க நிருபர். ''இழந்து விடுவோமோ என்று வருந்துமள வுக்கு எங்கள் வாழ்க்கை இனிமையாக இல் லை'' என்று பதிலளித்தானாம் அந்தச் சிறு வன். இழப்பதற்கு ஏதுமற்றவர்களின் கரங்க ளில் தன்னை ஒப்புவிக்க உலகமே காத்துக் கொண்டிருக்கிறது. பாலஸ்தீனம் மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன? ● அஜித்

படிப்பகம்

www.padippakam.com

# தொழுநோயாளிகள்

# அன்பைத் தேடும் மனிதர்கள்

உடல் முழுக்க புண்கள்! தோல் தெரியவில்லை; ரத்தமும், சீழும், பஞ்சும்தான் தெரிகிறது! விரலில்லா கைகளிலே ஒரு அலுமினியத் தட்டு! ''அய்யா... தயவு பண்ணுங்கய்யா'' என்ற உணர்ச்சியான குரல் அந்த உணர்ச்சியற்ற உருவத்திடமிருந்து! அன்றாடம் பேருந்துநிலையத்திலே தள்ளாடிக் கொண்டு நிற்கும் அம்முதியவர்தான் இவர்!

மூக்கு சப்பையாகி முகமே கோரமாகி கால்வாசி மட்டுமே திறக்க முடிந்த கண்களை திறந்து ''அம்மா.. தாயே'' என முனகிக் கொண்டிருக்கும் உருவம்! நடைபாதையில் நமது கால்களுக்கிடையில் கால்களை முற்றிலும் இழந்து படுத்திருக்கும் அந்தப் பெண்மணியின் குரல்தான் இது!

ஒழுக்கங்கெட்டவனாகத் திரிந்து வேசிகளிடம் சென்றதால், குஷ்டம் பிடித்த 'ரத்தக் கண்ணீர்' எம்.ஆர்.ராதா போன்றவர்கள் அல்ல இவர்கள்! நிலத்தை உழுதவர்கள்! உழைத்தவர்களின் பிள்ளைகள்! நல்ல குடும்பத்தினர்! ஒழுக்கமானவர்கள்தான்! பிறகெப்படி இந்நோய் இவர்களுக்கு?

சாக்கடை, கழிப்பிடம், குடிநீர், சுற்றுப்புறத் தூய்மை போன்ற ஆரம்ப - அடிப்படை வசதியின்மையாலேயே இந்நோய் பரவுகிறது.

உலகிலுள்ள தொழு நோயாளிகளில் மூன்றில் ஒரு பங்கினர் (12 மில்லியன் பேர்) இந்தியாவில்தான் இருக்கிறார்கள். பீகாரில் வருடந்தோறும் 5 அல்லது 6 பேர் பலியாகிறார்கள்! தமிழ்நாடு, ஒரிசா, பாண்டிச்சேரி, லட்சத் தீவுகளிலோ இதனளவு இன்னும் அதிகம் என கணக்கிட்டுள்ளார்கள்! ஆண்டிற்கு 30,000 தொழுநோயாளிகள் உருவாகிறார்கள், இந்தியாவில்!

கூவம் கரையில் குடிசைகள்! ரயிலடியில் கூடாரங்கள்! சாலையோரத்தில் இடிந்த - பாழடைந்த கட்டிடங்கள்! பாதாள சாக்கடை குழாய்கள்! ஊரின் ஒதுக்குப்புறத்தில் குடியிருப்புகள்! சேரிகள்! இந்தியாவின் பலகோடி மக்கள் இங்குதான்! தொழு நோய்க்கு பலியாகும் 90 சதவிகிதத்தினர் இவர்கள்தான்!

பஞ்சு கூட கிடைக்காமல் காகிதத்தையும் எச்சிலையுமே மருந்தாகப் போட்டுக்கொண்டு சீழ்வடியும் புண்ணுடம்புடன் பலரை சர்ச்சின், தர்க்காவின், கோயிலின் வாசலில் சாதாரணமாய் பார்க்கிறோம். தனிப்பட்ட முறையில் பாதுகாக்கப்பட்டு, சிகிச்சையளிக்கப்பட வேண்டியவர்கள் இவர்கள்! 'பிச்சைக்காரர்கள் ஒழிப்பு' என இவர்களது எஞ்சிய வாழ்வை பறிக்கும் நடவடிக்கையைத்தான் எடுக்கிறதே ஒழிய அரசு இவர்களுக்கு உரிய சிகிச்சையளிப்பதில்லை.

மலத்தைக் கூட அப்படி முகஞ்சுளித்து பார்க்க மாட்டார்கள்! அருவறுப்பாக அலட்சிய சிகிச்சையளிக்கிறார்கள் அரசு மருத்துவர்கள்!

கிராமங்களில்...?! மரத்தடி மருத்துவமனையும், நடமாடும் (வண்டி) மருத்துவமனையும்தான் கதி! பெரும்பாலும் 'கம்பவுண்டர்கள்'தான் இங்கு டாக்டர்கள்! தொழுநோயின் ஆரம்ப அறிகுறியிலேயே கட்டுப்படுத்த வாய்ப்பிருந்தும் அதற்கான குறைந்தபட்ச வசதிகூட இங்கில்லை!

இந்திய குடிமகன் ஒருவருக்கு மருந்துவத்திற்கென அரசு ஒதக்கியுள்ள தொகையோ வருடத்திற்கு ரூ.40! ஆனால் தொழு நோயாளிக்கு அளிக்கும் உலக சுகாதார மையத்தின் (WHO -வின்) தடுப் மருந்தின் ஒரு துளியே ரூ.320!

இதில் இன்னும் கொடுமை என்னவென்றால் இளம்பிள்ளைவாதம், கக்குவான் இருமல், டிப்தீரியா, போலியோ, காசநோய், சின்னம்மை போல தொழு நோயை குணப்படுத்தும் மருந்தும் சோதனைக் கட்டத்திலேயே உள்ளது. சோதனையில் சில தோல்விகள் பிரச்சினைகள், பக்க விளைவுகள் நேர்ந்தும் எவ்வித மாற்றமின்றி மேலும் மேலும், பல பத்தாயிரம் பேருக்கு அம்மருந்துகளை இட்டு சோதனையிடுகிறது அரசு!






படிப்பகம்

www.padippakam.com



'தொழுநோய் ஒழிப்பு திட்டம்' 'விழிப்புணர்வு முகாம்' என பல நடத்துகிறது அரசு! பலகோடி ரூபாயை இதற்கென ஒதுக்குகிறது! அதிகாரிகளும் மருத்துவர்களும் அப்பணத்தை எடுத்துக் கொண்டதுதான் மிச்சம்! தொழுநோய் பரவுவது கூட தடுக்கப்படவில்லை!

சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய தேவையில்லாத சதைபிண்டம் இந்த அரசுதானே ஒழிய! தொழுநோயாளிகள் அல்ல!

ஜடமாகிப் போனது தொழு நோயாளிகளின் உடலுணர்ச்சிகளாக இருக்கலாம்; உள்ள உணர்ச்சிகளல்ல!''எனது கைகளிலே விரல்களில்லை; உணர்வுகளில்லை; உண்மைதான்! ஆனால், எனது ரத்தத்திலே வேகமிருக்கிறது; பொம்மலாட்டக் கலை உணர்விருக்கிறது. அதனால், இப்பொம்மைலாட்டத்தை செய்து காண்பித்து எனது நண்பர்களை மகிழ்விக்க முடிகிறது'' - என்கிறார் பம்பாய் ஆசிரமத்திலுள்ள சுபாஸ் பாட்.

''எனக்கு குஷ்டம் வந்தும் என்னை பிறர் வெறுத்து ஒதுக்கியும் நான் தளரவில்லை. வாழ்க்கைக்காகப் போராடினேன். மைனா எனும் அனாதைப் பெண்ணை மணந்து கொண்டேன். எங்களுக்கு அழகான குழந்தை பிறந்துள்ளான். இவனை படிக்க வைத்து வேலை வாங்கிக் கொடுத்து நல்ல வாழ்க்கையை அமைத்துத் தர முயல்வேன்'' என்கிறார் கூலித் தொழிலாளி தாம்சன்.

எவ்வளவு நம்பிக்கையோடு வாழ்கிறார்கள் பாருங்கள்?! ஆனால், ஏனைய நோய்களைக் காட்டிலும் ஒப்பீட்டு ரீதியில் தொழு நோய் தொற்றுநோயல்ல என்பது தெரிந்தும் தொழு நோயாளிகளை சமூகம் புறக்கணிக்கவே செய்கிறது!

ஆரம்ப நிலையிலுள்ள நோயாளிகளும், அறிகுறி உள்ளவர்களும், உழைக்க முடியுமென வந்தாலும் சமூகம் வேலை கொடுக்க மறுக்கிறது. அரசின் கடனுதவியால் சிறு தொழில் செய்தாலும் பிரச்சினைதான்! செங்கல்பட்டைச் சேர்ந்தவர் குமார்! வங்கி கடனில் அகர்பத்தி தயாரிக்கிறார்! ஆனால், அவரால் அதை விற்பனை செய்ய முடிவதில்லை! இவர்கள் கைப்பட்ட பொருளைக்கூட தொட அஞ்சுகிறார்கள் 'மூடர்கள்'!

தொழுநோயாளிகளின் பிள்ளைகள் நன்றாகப் பிறக்கிறார்கள்! நோயின் அறிகுறி கூட இல்லை! ஆனால், இவர்களை சமூகம் ஏற்க மறுக்கிறது. பள்ளியில் படிக்க வைக்க முடிவதில்லை. வேலை கிடைப்பதில்லை. சக மனிதனுக்கான அங்கீகாரமே இல்லை.

பம்பாய் வாசி மீனா; அவளது பெற்றோர்களைப் போல தொழுநோயாளி இல்லை. ஆனாலும், தொழுநோயாளி ஒருவருக்கே பெற்றோர்கள் இவளை மணமுடிக்க ஏற்பாடு செய்திருந்தனர். நொந்துபோன மீனா தற்கொலை செய்து கொண்டாள்!

சமூகம் வாழ்வைத் தரவில்லை! நோய் இன்னும் சாவைத் தரவில்லை! இடையில் வாழ்வுக்காகப் போராடுகிறார்கள்! தனிமைப்பட தனிமைப்பட நம்பிக்கை இழக்கிறார்கள்! சிலர் மன நோயாளியாகிறார்கள்! பலர்... சாராயம், கஞ்சா, போன்றவற்றிற்கு அடிமையாவதோடு பாலியல் வக்கிரம் - முறைகேடான உறவு முறைகளுக்குப் பலியாகிறார்கள்! வீதியிலும், பஸ் ஸ்டாண்டிலும், கோயில் குலங்களிலும் பிச்சைக்காரர்களாகத் தள்ளப்படுகிறார்கள்!

சிறுதழும்போ தேமலோ இருந்தால் கூட நோய் முற்றிய சீழ் வடியும் குஷ்டரோகியை நினைத்துக் கொண்டல்லவா இவர்களை வெறுத்து ஒதுக்குகிறோம்?

நம்மில் எத்தனை பேர் இவர்களை சக மனிதர்களாக பாவிக்கிறோம்? இவர்களது வாழ்வு, உறவு, உணர்வு, ரசாபாசங்கள் சந்ததிகள் எதிர்பார்ப்புகளை மதிக்கிறோம்? பிச்சைக்காரர்களாகிவிட்ட அவர்களின் நிலையைப் பார்த்து இரக்கப்பட்டு அதிகபட்சம் பொருளுதவி தானே செய்கிறோம்?

''எங்களுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டாம். அன்பைக் காட்டுங்கள். குறைந்தபட்சம் முகம் சுளிக்காமலாவது எங்களை கடந்து செல்லுங்கள்'' என்கிறார் பாதத்தை தொழுநோய்க்குஇழந்து தள்ளாடியபடி தெருக்கூட்டும் 'தோட்டி' சாமிக்கண்ணு!

இவரின் குமுறலுக்கு எத்தனை பேரால் பதில் சொல்ல முடியும்? ● சுப்பு.

**சாக்கடை, கழிப்பிடம், குடிநீர், சுற்றுப்புறத் தூய்மை போன்ற ஆரம்ப - அடிப்படை வசதியின்மையாலேயே தொழு நோய் பரவுகிறது. உலகிலுள்ள தொழு நோயாளிகளில் மூன்றில் ஒரு பங்கினர் (12 மில்லியன் பேர்) இந்தியாவில்தான் இருக்கிறார்கள். வருடம் 30,000 பேர் அதிகரித்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் இதன் அளவு இன்னும் அதிகம்!**

அனாதைப் பெண்ணை மணமுடித்து குணமடைந்த தொழிலாளி; தன் அன்புக் குழந்தையைக் கொஞ்சுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com



# கும்பலோடு கோவிந்தா!

**நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தலை சேர்த்து நடத்தினால் - நிலையான ஆட்சி, விலையேற்றம், மண்டல், ராமஜென்ம பூமி முதலான தேசிய பிரச்சினைகள் முன்னணிக்கு வந்து, மாநிலப் பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடும். எனவே தேசிய பிரச்சினைகளைப் பேசியே மாநில ஆட்சியை மீண்டும் கைப்பற்றிவிடலாம் என்று கணக்கு போட்டு, ஓட்டுப் பொறுக்கிகளுக்கே உரித்தான புத்திசாலித்தனத்துடன் இந்த முடிவை 'இடது முன்னணி' எடுத்துள்ளது.**

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுடன் சேர்த்து கேரள மே.வங்க சட்டமன்றத் தேர்தலை நடத்துவதென அம்மாநிலங்களை ஆளும் 'இடது முன்னணி' அரசுகள் தீர்மானித்துள்ளன. நாடாளுமன்றத் தேர்தலுடன் சேர்த்து சட்டமன்றத் தேர்தலை நடத்துவதன் மூலம் செலவுகளை மட்டுப்படுத்த முடியும்; போட்டியிடும் கட்சிகளின் தேர்தல் வேலைகள் சுலபமாகிவிடும் என்று 'இடது முன்னணி' தலைவர்கள் இதை நியாயப்படுத்துகின்றனர். ஆட்சிக்காலம் முடிய இன்னும் ஓராண்டுக்கு மேல் இருக்கும் போது, சட்டமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த துணிவுடன் 'இடது முன்னணி' முன்வந்துள்ளதையும், அதன் தன்னம்பிக்கையையும் கண்டு விபரம் புரியாத போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் அணிகள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். ஆனால் 'இடது' முன்னணியின் இந்த முடிவு, அவர்களின் துணிவையும் தன்னம்பிக்கையையும் காட்டவில்லை. நாடாளுமன்றத் தோதலுக்குப் பின்னர் சட்டமன்றத் தேர்தலை எதிர் கொள்ள அஞ்சும் கோழைத் தனத்தைத்தான் காட்டுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு சட்டமன்றத் தேர்தல்களை தனியே நடத்தினால் மாநிலப் பிரச்சினைகள் முன்னணிக்கு வந்துவிடும். தமது ஆட்சியின் சாதனையாக உருப்படியாக எதையும் கூறமுடியாத நிலையில், எதைச் சொல்லி ஓட்டுப் பொறுக்குவது என்பது கேள்விக்குறியாகி விடும். மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதென்பது குதிரைக் கொம்பாகிவிடும். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தலை சேர்த்து நடத்தினால் - நிலையான ஆட்சி, விலையேற்றம், மண்டல், ராமஜென்ம பூமி முதலான தேசிய பிரச்சினைகள் முன்னணிக்கு வந்து, மாநிலப் பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடும். எனவே தேசிய பிரச்சினைகளைப் பேசியே மாநில ஆட்சியை மீண்டும் கைப்பற்றி விடலாம் என்று கணக்கு போட்டு, ஓட்டுப் பொறுக்கிகளுக்கே உரித்தான புத்திசாலித்தனத்துடன் இந்த முடிவை 'இடதுமுன்னணி' எடுத்துள்ளது.

### வங்கத்தின் இருண்ட ஆட்சி

போலிக் கம்யூனிஸ்டுகள் பெருமையாகக் குறிப்பிடும் மே.வங்கத்தின் 14 ஆண்டு கால இடது முன்னணி ஆட்சியில் சாதனை என்று குறிப்பிடும்படியாக எதுவுமில்லை. போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து தொடர்ந்து நீடித்து வரும் மின்வெட்டால் மே.வங்கம் இன்னமும் இருண்டே கிடக்கிறது. தொழிலாளர் நலனுக்கான ஆட்சியாக பீற்றிக் கொள்ளும் போலிகளின் ஆட்சியில், தொடர்ச்சியாக ஆலைமூடலும் ஆட்குறைப்பும் நடந்து லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வீதியில் வீசியெறிப்பட்டனர். ஊழலற்ற ஆட்சியைத் தருவதாக வாக்களித்த இடதுகளின் ஆட்சியில் வங்காள விளக்கு ஊழல் சந்தி சிரித்தது. 'வங்கத்து சிங்கம்' ஜோதிபாசுவின் மகன் சந்தன்பாசு இந்த ஊழலில் சிக்கியிருந்தார்.

ஜனநாயகத் தொட்டிலாக சித்தரிக்கப்பட்ட மே.வங்க 'இடதுசாரி' ஆட்சி படிப்படியாக சாயம் வெளுத்து குண்டாந்தடி ஆட்சியாக மாறிவிட்டது., இதர ஓட்டுக்கட்சி அரசுகளைப் போல 'மார்க்சிஸ்ட்' ஆட்சியும் அநியாயமாக பேருந்து, டிராம் கட்டணங்களை உயர்த்தியது. இதற்கெதிராகப் போராடிய மக்களின் மண்டையைப் பிளந்தது. எல்லாவற்றையும் விட, கடந்த நகராட்சித் தேர்தலின் போது 'மார்க்சிஸ்ட்' குண்டர்கள் கையில் துப்பாக்கி, நாட்டு வெடிகுண்டுகளுடன் கள்ள ஓட்டுப் போட்டனர்.

போலிகளின் 'மக்கள் நல' ஆட்சியில் மக்களின் அடிப்படை வசதிகள் கூட அறவே புறக்கணிக்கப்பட்டன. தரக்குறைவான சீர்கேடடைந்த மருத்துவமனை, குண்டும் குழியுமான சாலைகள், குடிநீர் கழிப்பிட வசதிகளற்ற சேரிகள் என்பதாக மே.வங்கம் சீரழிந்தது. அதிகாரிகள் - போலீசு - காண்டிராக்டர்களின் கள்ளக்கூட்டு உறுதிப்பட்டு ஊழல் சர்வமயமாகியது. பெகரலாவில் கடுகு எண்ணெயில் ரேஷன் கடைக்காரர்கள் கலப்படம் செய்ததில் நூற்றுக்கணக்கானோர் கை, கால்கள் முடமாகிப் போனார்கள். பிராட்டி என்னுமிடத்தில் வங்கதேச அகதிகளை நிர்வாணப்படுத்தி ஒரு சமூக விரோத கும்பல் கற்பழித்தது. பண்டாலாவில் சமூக நல பெண் ஊழியர்கள் பட்டப்பகலில் சமூக விரோதிகளால் கொல்லப்பட்டனர்.

### வங்கத்தின் வழியில் கேரளா

இதே நிலைமைதான் கேரளாவிலும் உள்ளது. கடந்த தேர்தலில் காங்கிரசு முதல்வர் கருணாகரனின் ஊழல் ஆட்சியைச் சகிக்க முடியாமல் 'இடது' முன்னணியை மக்கள் வெற்றி பெறச் செய்தனர். ஆட்சிக்கு வந்த போலிகள், காங்கிரசுக்கு சற்றும் நாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை விரைவிலேயே நிருபித்து விட்டார்கள். அனைத்து இந்து கோயில்களின் தேவஸ்தான கமிட்டிகளை 'மார்க்சிஸ்டுகள்' ஆக்கிரமித்துக் கொண்டனர். கோவளம் கடற்கரையில் வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர் கற்பழிக்கப்பட்ட போது, மேலைநாடுகளில் கற்பழிப்பு டீ குடிப்பதைப் போன்றது என்று

கேரளா - சொந்த மண்ணில் வேலையில்லை. அரபுநாடுகளுக்குச் செல்ல தலைமைச் செயலகத்தில் விண்ணப்பிக்க நிற்கும் வேலையற்றோர் பட்டாளம்.



படிப்பகம்

www.padippakam.com

வாய்க்கொழுப்போடு பேசினார் 'மார்க்சிஸ்டு' முதல்வர் நாயனார். வகுப்புவாதத்தை எதிர்ப்பதாகக் கூறும் போலிகளின் ஆட்சியில் இந்துவெறி ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா அச்சுறுத்தும் சக்தியாக வளர்ந்து விட்டது. பெருமுதலாளிகளின் ஆதிக்கத்தை எதிர்ப்பதாகக் கூறிய 'மார்க்சிஸ்டுகள்' இப்போது டாட்டா - பிர்லா - அம்பாணி - தாப்பர் முதலான தரகுப் பெருமுதலாளிகளை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கின்றனர். மே.வங்கத்தைப் போலவே கேரளாவிலும் விலையேற்றத்தையும், புதியவரிகளையும் மக்கள் மீது திணித்தனர். எல்லாவற்றையும் விட புதிய சாராயக் கொள்கையை வகுத்து, சாராய முதலாளிகளின் கூட்டாளிகளாக மாறியது 'இடதுசாரி'களின் ஆட்சி. ஊருக்கு உபதேசம் செய்யும் 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் தமது மகன் திருமணத்துக்கு வரதட்சிணை வாங்குவது, ஐந்து நட்சத்திர கலாச்சார பாணியில் ஆடம்பரத் திருமணம் நடத்துவது, வெளிநாடுகளுக்கு அரசு செலவில் ஊதாரித்தனமாக உல்லாசப் பயணம் போவது என்பதாக சுகபோகத்தில் நீச்சலடித்தனர்.



மே.வங்க போலீசு ராஜ்ஜியத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்; நக்சல்பாரி அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி போராட்டம்.

### எதிர்க்கட்சி கூட்டணி பிளவில் குளிர்காய முயற்சி

போலிக் கம்யூனிஸ்டுகளின் இந்த முடிவுக்கு, எதிர்க்கட்சியான காங்கிரசுக் கூட்டணியில் ஏற்பட்டுள்ள பிளவும் ஒரு முக்கிய காரணம். கேரளாவில் மலப்புரம், கோழிக்கோடு, படகரா, கண்ணனூர் முதலான மாவட்டங்களில் முஸ்லீம் லீக் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. முஸ்லீம் லீக்கின் ஆதரவின்றி காங்கிரசால் ஆட்சியைப் பிடிக்க முடியாது. ஆனால் இப்போது முஸ்லீம் லீக், காங்கிரசு கூட்டணியிலிருந்து விலகிவிட்டது. வரப்போகும் தேர்தலில் தேசிய முன்னணியோடு கூட்டுச்சேர அது முடிவு செய்துள்ளது. மேலும் அண்மையில் நடந்த மாவட்டக் கவுன்சில் தேர்தலில் ஆளும் இடது முன்னணியும் முஸ்லீம் லீக்கும் தொகுதி உடன்பாடு செய்து கொண்டு காங்கிரசை மண்ணைக் கவ்வச் செய்துள்ளன. எனவே மீண்டும் முஸ்லீம் லீக் மனம் மாறி காங்கிரசுடன் கூட்டணி சேருமுன் இச்சாதகமான சூழ்நிலையில் அதனுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்டு தேசிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைப் பிடிக்க போலிக் கம்யூனிஸ்டுகள் தீர்மானித்துள்ளனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் கடந்த தேர்தலில் வகுப்புவாத சக்தியான முஸ்லீம் லீக்குடன் எந்தக் கூட்டும் கிடையாது என்றும், சாதி-மத சக்திகளைக் கொண்ட காங்கிரசு - முஸ்லீம் லீக் கூட்டணியை வீழ்த்துமாறும் பிரச்சாரம் செய்தனர். கேரளாவில் இடதுசாரிகளின் வெற்றியானது, வகுப்புவாதத்துக்கு எதிரான வெற்றி என்று மார்தட்டினர். ஆனால் இப்போது முஸ்லீம் லீக்குடன் தொகுதி உடன்பாடு செய்து கொள்வதில் தவறில்லை என்று தட்டைத் திருப்பிக் கொண்டு தாளம் போடுகின்றனர். சாதிய கட்சிகளுடன் எந்த கூட்டும் கிடையாது என்று கூறிவிட்டு இப்போது கேரள காங்கிரஸ் (ஜேகப் கோஷ்டி) மற்றும் பிற சாதியக் கட்சிகளுடன் வெட்கமின்றி கூட்டு சேர்ந்துள்ளனர்.

### சந்தர்ப்பவாதமும் சாதகமான நிலைமையும்

இதே போல மே.வங்கத்திலும் கூட்டணிகளில் மாற்றம் ஏற்பட்டு போலிக் கம்யூனிஸ்டுகளுக்குச் சாதகமான நிலைமை உள்ளது. 'இடது' முன்னணிக்கு வெளியில் உள்ள ஜார்கந்து முக்தி மோர்ச்சா, 'மார்க்சிஸ்ட்' ஒருங்கிணைப்புக் குழு, இந்திய மக்கள் முன்னணி முதலான கட்சிகளும் குழுக்களும் வகுப்புவாத, பாசிச சக்திகளான பாரதீய ஜனதாவும் காங்கிரசும் பிரதான எதிரிகள் என்றும், தேர்தலில் அவற்றை வீழ்த்துவதே தமது நோக்கமென்றும் அறிவித்துள்ளன. இத்தகைய கட்சிகள் - குழுக்களுடன் பேரம் நடத்தி பரந்து விரிந்த 'இடதுசாரி' ஐக்கிய முன்னணியைக் கட்டி, தொகுதி உடன்பாடு செய்து கொள்ள வலது கம்யூனிஸ்டுகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

மேலும் இந்தக் கட்சிகளும் குழுக்களும் மண்டல் ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. இப்போது போலிக் கம்யூனிஸ்டுகள் தாங்களும் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஆதரிப்பதாக புதுவேடம் போட்டுக் கொண்டுள்ளனர். ஆனால் மண்டல் விவகாரத்தில் பாரதீய ஜனதாவின் நிலைப்பாடுதான் இப்போலிக் கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடு. அதாவது, சாதி அடிப்படையில் அல்லாமல் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு அமையவேண்டும் என்றுதான் நேற்று வரை இப்போலிகள் வாதிட்டு வந்தனர். இப்போது ''மண்டல் சமூகநீதி''க்கு கணிசமான ஓட்டு கிடைக்கும் என்பதால் தமது நிலைப்பாட்டை சந்தர்ப்பவாதமாக மறைத்துக் கொண்டு தேசிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்தும், இதர இடதுசாரி கட்சிகள் - குழுக்களுடன் தொகுதி உடன்பாடு செய்துகொண்டும் பதவியைப் பிடிக்க அலைகின்றனர்.

மறுபுறம் மே.வங்கத்தின் காங்கிரசுக் கட்சி கோஷ்டி பூசலால் அழுகி நாறுகிறது. இதுநாள்வரை மே.வங்க அரசியலுடன் தொடர்பின்றிக் கிடந்த முன்னாள் முதல்வரும், பாசிசக் கொடுங்கோலனுமான சித்தார்த்த சங்கர் ரே-வை இப்போது திடீரென மே.வங்க காங்கிரசு தலைவராக, ராஜீவ் கும்பல் நியமித்துள்ளது. இதனால் அதிருப்தியடைந்துள்ள முந்தைய தலைவர் கானிகான் சௌத்திரியின் கோஷ்டி தேர்தல் வேலைகளைச் செய்ய மறுக்கிறது. ''அவருக்கு மாநில அரசியலே தெரியாது. அவரது தலைமையால் காங்கிரசு மாபெரும் தோல்வியை சந்திக்கப் போகிறது.'' என்று வெளிப்படையாக குற்றம் சாட்டுகிறார் கானிகான் சௌத்திரி.

மேலும் மே.வங்க காங்கிரசு தலைமையில் உள்ள ஒரே முஸ்லீம் கானிகான்தான்; அவரை நீக்கிவிட்டு ரே-வை நியமித்ததன் மூலம் முஸ்லீம் ஓட்டுக்கள் காங்கிரசுக்கு கிடைக்காமல் போகும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

கட்சிமாறிகள், கிரிமினல்கள், பிழைப்புவாதிகளைக் கொண்ட தேசிய முன்னணியோடு சந்தர்ப்பவாதக் கூட்டு சேர்ந்து குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு இத்தேர்தல் ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. இதர ஓட்டுக்கட்சிகளைப் போல சந்தர்ப்பவாத சாகசங்களில் இறங்கி மக்களை ஏய்த்து எப்படியாவது ஆட்சியைப் பிடிப்பது என்பதைத் தவிர இப்போலிகளிடம் வேறெந்த நோக்கமும் இல்லை. ''உலகம் மாறும்போது கம்யூனிஸ்டுகளும் தங்களை மாற்றிக் கொள்கிறார்கள்'' என்று பொருத்தமாகவே மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு இத்தேர்தல் உத்தியைப் பற்றி பெருமைப்பட்டுக் கொள்கிறார். உண்மைதான்! இந்திய நாடாளுமன்ற அரசியல் பொறுக்கித்தனங்களுக்கேற்ற பொருத்தமான முதலாளித்துவக் கட்சியாக சீரழிவதை நோக்கி இப்போலிகள் புதுவேகத்துடன் புறப்பட்டுள்ளதையே அவர்களது தேர்தல் உத்தி தெளிவாக்கியுள்ளது.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

## கிசுகிசு - குடும்பப் பத்திரிக்கைகள்:

# அரசியல் சீக்குக்கு அலங்காரம்

**கிசுகிசு பத்திரிக்கைகள் ஜெயலலிதாவை போட்டி போட்டுக் கொண்டு அலங்கரிக்கின்றன. அரசியல் சீக்கு ஆரோக்கியமான அரசியலாக்கப்பட்டு சூடாக விற்பனையாகிறது!**

''இப்போது தமிழக மக்கள் எதிர்கால அரசியலின் நம்பிக்கை நட்சத்திரமாக யாரைக் கருதுகிறார்கள்?

''உண்மையாகச் சொல்லப்போனால், செல்வி ஜெயலலிதாவைத்தன்!

''இந்த உண்மை சிலருக்குக் கசப்பாக இருக்கலாம். இவர்கள் உண்மைக்குத் திரை போடவும் முயலலாம். ஆனால், உண்மை உண்மையாகத்தானே ஒளிவீச முடியும்?'' என்று உரிமையோடு ஜெயலலிதாவுக்கு 'திருஷ்ட்டி' சுற்றிப் போடுகிறது 'தரமான' குடும்பப் பத்திரிக்கை ஆனந்த விகடன் (3.2.91). இந்த வரிசையில் ஏராளமான நடுநிலை ஏடுகளும் தவம் கிடக்கின்றன.

''... தி.மு.கழகத்திலிருந்து விலக்கப்பட்ட எம்.ஜி.ஆர்., புதிதாக அ.தி.மு.கழகத்தை தோற்றுவித்தபோது எத்தனை எதிர்ப்புகள்? எத்தனை ஏசல்கள்?... ''அவர் ஒரு சினிமாக்காரர்! கவர்ச்சி நடிகர்...'' என்று ராகம் பாடிக் கொண்டே இருந்தனர். ஆனால், பாமர மக்கள் அவரை ஓர் அரசியல் தலைவராக, நம்பிக்கை நட்சத்திரமாக ஏற்றுக் கொண்டனர்.

''அதேபோல் 'ஜெயலலிதா சினிமா நடிகை... கவர்ச்சிக் கன்னி..' என்ற வாதமும், இடுப்பொடிந்து கிடக்கிறது. அவரை ஓர் அரசியல் தலைவியாகவே மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்'' என்று ஜெயலலிதாவின் காலில் விழுகின்றன இப்பத்திரிக்கைகள். அவை சொல்கின்றன:

''ஜெயலலிதா வெற்றிகரமாக ஒளி வீசுவாரா இல்லையா என்று விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து, தர்க்க ரீதியில் அலசி 'அரசியல் ஆராய்ச்சியாளர்கள்' ஒரு முடிவுக்கு அவசரப்பட்டு வந்துவிட முடியாது. ஏனெனில், நடைமுறை அரசியல் - அதுவும் தமிழ்நாட்டு நடைமுறை அரசியல் முற்றிலும் மாறுபட்டது. எந்த அரசியல் வல்லுநரின் திறனாய்வையும் பிசுபிசுக்க வைக்கக் கூடியது'' என்று ஜெயலலிதா பக்கம் மந்தையாக சாயாதவர்களை மிரட்டுகின்றன.

அரசியல் சமுதாய வார ஏடுகள் என்று சொல்லிக் கொள்ளும் தராசு, நக்கீரன், ஜூனியர் விகடன், ஜூனியர் போஸ்ட் ஏடுகள் இதே பாணியில் ஏராளமான அட்டைப்பட கட்டுரைகளை இப்போது வெளியிடுகின்றன.

நக்கீரன் ஏடு சென்ற ஆண்டு டிசம்பரிலேயே இத்தொழிலை பெருமையுடன் துவக்கியது. ஜெயலலிதா தயவில் சந்திரசேகர் ஆட்சி ஊசலாடிக் கொண்டிருந்த போது, கருணாநிதி ஆட்சிக்கு கெடு முடிந்துவிட்டது என்று மகிழ்ச்சியில் பொங்கியது!

''சந்திரசேகருக்கு ஜெயலலிதா 3 நிபந்தனைகள்! - கருணாநிதி ஷாக்!'' (நக். 24.11.90) ''கருணாநிதி ஆட்சிக்கு சந்திரசேகர் கெடு!'' (15.12.90) ''ஆட்சியைக் காப்பாற்ற கருணாநிதியின் தகிடுதத்தங்கள்! மீண்டும் எம்.ஜி.ஆர். ஆட்சி - டெல்லி விரைகிறார் ஜெயலலிதா'' (29.12.90) ''ஹேப்பி நியூ இயர்! தி.மு.க.வுக்கு வேட்டு! ஓரம் போ... ஓரம் போ... ஜெயலலிதா வண்டி வருது! - அ.தி.மு.க.வின் அதிரடி அரசியல் ஆரம்பம்!'' (5.1.91) ''ஜெயலலிதாவின் டெல்லி விசிட்! திடுக் திருப்பங்கள்'' (12.1.91) ''கருணாநிதி நாற்காலிக்கு நாக்-அவுட்! ஜெயலலிதாவின் கன்னி வெடி'' (9.2.91) ''சட்டசபைத் தேர்தல் அ.தி.மு.க. - 98 தி.மு.க.46 வெற்றி வாய்ப்பு! லேட்டஸ்ட் டேட்டாமாடிக்ஸ் சர்வே ரிப்போர்ட்'' (2.3.91) ''தேர்தல் வெற்றிக்கு ஜெயலலிதாவின் அதிரடி நடவடிக்கை ஆரம்பம்'' (9.3.91) என்று ஒவ்வொரு இதழ் அட்டைப் படமும் ஜெயலலிதாவை தாங்கி வந்தது.

கவர்ச்சி - பொறுக்கி அரசியலின் கதாநாயகி ஜெயலலிதாவை ஓட்டுசீட்டு அரசியலின் வீரிய ஒட்டுரக விளைச்சலாக கிசுகிசு பத்திரிக்கைகள் திட்டமிட்டு வளர்க்கின்றன. இதே ஏடுகள்தான் மற்றொரு புறம், ஆட்சியிலும் கட்சியிலும் ஊழலும் அதிகார முறைகேடும் மலிந்து போவதாக நெற்றிக் கண்ணை காட்டுகின்றன. ஆக, கவர்ச்சி - பொறுக்கி அரசியலை வசீகரமாக்கி விற்பதும் அது உருவாக்கும் கழிசடை அரசியலை எதிர்ப்பதாகவும் இரண்டு பக்கமும் சூடாக வியாபாரம் செய்கின்றன.

இதே அளவுக்கு சற்றும் குறையாமல் இன்னொரு கிசுகிசு அரசியல் ஏடு தராசு,

**மர்மமான காரணங்களால் ஜெயலலிதா முன்பு அரசியலிலிருந்து ஒதுங்கிய போதுகூட கிசுகிசு பத்திரிக்கைகள் அதையும் அரசியலாக்கின. இப்போது ஜெயலலிதாதான் வருங்கால முதல்வர் என்று பூரித்துப் போகின்றன.**









படிப்பகம்

www.padippakam.com

மக்கள் கலை இலக்கியக் கழக இதழ்

புதிய கலாச்சாரம்

மீண்டும் மாத இதழாக
மேதினம் முதல்
வெளிவருகிறது!

ஆண்டுசந்தா ரூ.24. தனிஇதழ் ரூ.2.

தொடர்புக்கு:
சீனிவாசன், 45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம், சென்னை-600 049.

ஜெயலலிதாவின் அரசியல் அங்கலட்சணங்களை பிரமிப்புடன் எழுதி விற்கிறது. ''டெல்லி மாற்றம் எதிரொலி! ராஜீவ் - ஜெயலலிதா 'கன் ஷாட்!' கருணாநிதி குடும்பத்திற்கு சி.பி.ஐ. கண்காணிப்பு டைட்! - டிஸ்மிஸ் அதிர்ச்சியினால் வெளிநாடுகளுக்கு ஓடும் வி.ஐ.பிக்கள்'' (20.11.90) ''மாறன் - ஸ்டாலின் - கருணாநிதி வகையறாக்களுக்கு 'கல்தா' கொடுக்க (ஜெயலலிதா) ஃபைனல் திட்டம்!'' (27.11.90) ''சூழ்ச்சி வலை அம்பலம்-ஜெயலலிதாவை ஒழித்து விட்டு அ.தி.மு.க.வை ஓய்த்துக் கட்டப் புதிய சதி'' (8.1.91) ''ஜெயலலிதா மீது 'பேட்ரியாட்' ஏவுகணை! திருநாவுக்கரசு கருணாநிதி கூட்டுச் சதி!'' (5.2.91) ''ஜெயலலிதாவின் ஃபைனல் மிரட்டல்! - சந்திரசேகர் சரிகிறார்'' (29.1.91) ''ஜெயலலிதாவின் முதுகில் குத்த மூத்த தலைவர் ரெடி'' (26.2.91) ''மு.க.ஸ்டாலின் கைது: ஜெயலலிதா திட்டம்! மர்மங்கள் 'பட் படார்!''' - இப்படி ஜெயலலிதாவை சுற்றி பெரும் சதி வலை பின்னப்படுவதாகவும் அதை ஒவ்வொன்றாக அரசியல் விவேகத்துடன் ஜெயலலிதா அறுத்தெறிவதாகவும் எழுதி வாசகர்களை 'சிலிர்க்க' வைக்கிறது, தராசு.

பார்ப்பன ஏடு கல்கி, இப்போதே ஜெயலலிதாவை முதல்வராக்கி ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் சிரம் தாழ்த்தி சொல்கிறது.

''ஒரு ஜனநாயக நாட்டில், யாருக்கும் தேர்தலில் வெற்றிபெற்று முதல்வராகும் உரிமை இருக்கிறது; அது ஜெயலலிதாவுக்கும் இருக்கிறது. அதை, யாரும் மறுக்க முடியாது. ஆனாலும், பதவியில் இல்லாத போதே ஒரு பட்டத்து ராணியின் தோரணையோடு நடந்து கொள்கிற ஜெயலலிதா... ஆனால், ''இதுவொரு பிரச்னையே இல்லை. அவர் பதவிக்கு வந்த பிறகு, இந்தச் சந்தேகமும் அச்சமும் இருந்த இடம் தெரியாமல் போய் விடும். அந்த அளவுக்கு அவர் திறமையாகவும் கண்காணிப்பாகவும் செயல்படுவார்!'' என்கிறார் இ.காங்கிரசைச் சேர்ந்த ஒரு முக்கிய பிரமுகர்.

''உதாரணத்திற்கு ராஜ்ய சபையின் துணைத் தலைவராக ஜெயலலிதா நியமிக்கப்பட்ட போது, அவர் எப்படி நடந்து கொண்டார் என்பதைப் பாரபட்சமில்லாமல் யோசித்துப் பாருங்கள்... குறிப்புகள் எடுத்துக் கொள்ளாமல் அவர் சபைக்கே சென்றதில்லை. இதன் காரணமாக, மாற்றுக் கட்சி எம்.பிக்கள் எல்லாம்கூட, அவருடன் பழகுவதை ஒரு மரியாதைக்குரிய விஷயமாகக் கருதினார்கள் என்பது எனக்கே தெரியும்'' என்கிறார் அவர்'' என்று பூரித்து போகிறது.

''ஆயினும் அவரது உடல்நிலை அவரது சுறுசுறுப்பான செயல்களுக்கு (முதல்வர் பதவிக்கு) இடம் கொடுக்குமா?'' என்று தானே அப்பாவிபோல் கேள்வி எழுப்பி இப்படி பதில் எழுதுகிறது.

''எனவே, ''ஜெயலலிதாவின் உடல் நிலை சீராக இருக்கிறது. அவர் ஒரு மாநிலத்தை ஆள்வதில் உள்ள மலைபோன்ற பிரச்னைகளையும் பொறுப்புக்களையும் தாங்கி சிறந்த நிர்வாகத்தை வழங்கக்கூடிய ஆரோக்கியம் பெற்றிருக்கிறார்'' என்பது மக்களுக்கு உறுதியாகத் தெரிய வர வேண்டும்... அவர் உடல்நிலை பற்றிக் கவலைப்படவே அவசியமில்லை. எனில் அதையும் ஒரு டாக்டர் குழு அறிக்கையாகக் கூறிவிட்டால் மக்களுக்கும் நிம்மதி; வதந்திகளுக்கும் இடமிராது'' என்று கவலைப்படுகிறது (கல்கி 24.3.91).

ஜூனியர் விகடன், ஜூனியர் போஸ்ட் ஏடுகள் ஜெயலலிதாவின் கருணாநிதி எதிர்ப்பு அதிரடி அரசியலைக் கண்டு புளகாங்கிதம் கொள்கின்றன. ''ஜெயலலிதா இறுதி எச்சரிக்கை! தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்யாவிட்டால்...?'' (ஜூ.வி. 30.1.91) ''தேர்தலில்... ஜெயலலிதாவின் 'ஹிட் - லிஸ்ட்!'' (ஜூ.வி. 6.3.91) ''பரபரப்பான திருப்பம்... ஜெயலலிதாவின் அடுத்த கட்ட நடவடிக்கை!'' (1.2.91) என்று ஜெயலலிதாவின் விசுவாசிகளாகவே மாறி எதிரணி அரசியல் வாதிகளை பார்த்து ஓயாமல் குரைக்கின்றன.

வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்து, சந்திரசேகர் பிரதமரானவுடனேயே இப்பத்திரிக்கைகள், ஜெயலலிதாவை அலங்கரிக்க ஆரம்பித்துவிட்டன. ஒருபுறம், கருணாநிதி ஆட்சியை கவிழ்ப்பது ஜனநாயக விரோதம் என்று பேட்டி கட்டுரைகளை வெளியிட்டுக் கொண்டே, முதல்வர் பதவியில் அமர்வதற்கு ஜெயலலிதாவுக்கு தகுதி இருக்கிறதா, இல்லையா என்று திட்டமிட்டு, வாத - பிரதி வாதங்களை கிளப்பின.

இதில் ஜெயலலிதாவுக்கு கூடும் கூட்டத்தை பிரதானமாக்கி ''தமிழக அரசியலின் திசையை, ஜெயலலிதாவால் மாற்றிட முடியும் என்கிற நிலை ஏற்பட்டு போயிருப்பதை மறுக்க முடியாது'' என்று எழுதுகின்றன. ஜெயலலிதாவின் ''பட்டத்து ராணி தோரணை''யை தவிர்க்க முடியாது, தேவையானது என்று அங்கீகரிக்கின்றன!

''நமது நாட்டில் பொதுவாக எந்தக் கட்சியிலுமே தனிநபர் வழிபாடும், தனிநபர் செல்வாக்கும்தான் அதிகம். கட்சியின் முக்கிய தலைவர்கள், கூட்டுப் பொறுப்பு ஏற்று கட்சியையோ ஆட்சியையோ நடத்திச் செல்வது என்பது அநேகமாக இல்லை. மந்திரி சபை என்று இருந்தாலும், பெரும்பாலும் முதல்வர்தான் எல்லா முக்கிய முடிவுகளையும் எடுக்கிறார்'' என்று கூறி பாராளுமன்ற ஜனநாயகம் பெற்றெடுத்த மற்ற ஓட்டுக் கட்சித் தலைவர்களை விட ஜெயலலிதா வித்தியாசமானவரல்ல! தீண்டதகாதவருமல்ல! என்று சான்றிதழ் தருகிறார்கள்.

பத்திரிக்கைகள் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று முதலாளித்துவ அறிஞர்கள் கூறுவதன் அர்த்தம் இப்போது புரிகிறதா? நோய் கிருமிகளை, நோய் தீர்க்கும் மருந்தாக உட்கொள்ள வைக்கும் செயல்தான் இது! அவர்கள் மொழியில் இது பத்திரிக்கை தர்மம்!

● குணசேகரன்



படிப்பகம்

www.padippakam.com




● மாவீரன் ஸ்டாலின், *சீனத்துச் சிங்கம்* மாவோ போன்றோரை நூறு சதவீதம் ஏற்றிப் போற்றும் தாங்கள் மதவாதிகளும், இனவாதிகளும், பாசிஸ்டுகளுமான பஞ்சாப், காஷ்மீர் பிரிவினைவாதிகளின் சுய நிர்ணய உரிமைப் போர் நியாயமானது என்று கூறுகிறீர்களே. வர்க்க சிந்தனை அறவே இல்லாத இந்த மத, இனவாதிகள் ஒரு உழைப்பாளி அரசையோ, ஸ்திரமான ஜனநாயக அரசாங்கமோ இவர்களால் தரமுடியுமா? (உதாரணம் வங்க தேசம், பாகிஸ்தான்). மேலும் மார்க்சிய - லெனினிய வாதிகளான தாங்கள் இவர்களின் இந்த மதவாத, இனவாதப் போராட்டம் நியாயமானது என்று கூறும் காரணம் யாது: இந்தியா ஒரு தனித்தேசியம் இல்லை என்பதாலா? இந்திய தேசிய எதிர்ப்பா? உலகத்தில் யார் மதத்தின், இனத்தின் அல்லது வேறு (வர்க்கத்தைத் தவிர) கொள்கையின் மூலம் சுய நிர்ணய உரிமை கோரிப் போராடினாலும் அது அநியாயம் என்று கூறுவீர்களா?

— *கே.பாலசுந்தரம், நாடிமுத்துநகர்.*

● ஒரு மாநிலத்தின் பெருமளவு மக்களின் விருப்பமான பிரிந்து போகும் சுய நிர்ணய உரிமையை ஆதரிக்கும் பு.ஜ., குட்டி முதலாளித்துவ சக்திகளின் கீழ் பிரிந்து போவதை விரும்பாத பு.ஜ. அசாம் ''உல்ஃபா'' போராளிகளின் கீழ் அசாம் பிரிந்து போவதை விரும்புகிறதா? அதேபோல காஷ்மீரி போராளிகளின் கீழ் காஷ்மீர் பிரிந்து தனி நாடாகப்போவதை விரும்புகின்றதா?

— *சூர்யா, மதுரை.*

★ பஞ்சாப் மற்றும் காஷ்மீர் பிரச்சினைகள், இந்திய அரசு சித்தரிப்பதைப் போல முறையே ''*சீக்கிய*, இசுலாமிய கடுங்கோட்பாட்டு வாதிகளின் பிரிவினைவாத, பயங்கரவாத, பாக் - தூண்டுதல் இயக்கங்கள்'' என ஒரே அடிப்படைத் தன்மைகளைக் கொண்டதாகப் பார்ப்பது தவறாகும். பஞ்சாபில் இந்துக்களை விலக்கிவிட்டு காலிஸ்தானி அமைப்புகள் அனைத்தும் பயங்கரவாத இயக்கம் யாவும் *சீக்கிய* மதவெறி, பாசிச அடிப்படையிலானவை. அவற்றை நாம் ஆதரிப்பதில்லை. காஷ்மீரில் சுய நிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி மதவெறி அடிப்படையிலானது அல்ல; இனவிடுதலைக்கான நியாயமான இயக்கம் ஆதலால் அதை ஆதரிக்கிறோம். ஆனால், ஜ.கா.வி.மு.விடமிருந்து சுய நிர்ணய உரிமைப் போராட்டத் தலைமையைக் கைப்பற்றி காஷ்மீரைப் பாகிஸ்தானுடன் இணைப்பதற்காக இசுலாமிய மதவாதிகளாலும், பாகிஸ்தானிய உளவாளிகளாலும் நிறுவி, இயக்கப்படும் ஜமாத் - ஈ - இசுலாமி, அல்லா புலிகள் போன்ற அமைப்புகளும் உள்ளன. இவற்றை நாம் ஆதரிக்கவில்லை; எதிர்த்து முறியடிக்க வேண்டும் என்றுதான் கூறுகிறோம்.

நமது நாட்டில் *சீக்கிய* மதவாதமும், இசுலாமிய மதவாதமும் தோன்றி வளர்வதற்கான முக்கியமான காரணமாக இருப்பது அம்மத உரிமைகளுக்கு எதிரான, இந்து மதவெறி வகுப்புவாதம் இருக்கிறது; இதற்குப் பின்பலமாகஅரசு பயங்கரவாதம் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, இந்தமதவெறி வகுப்புவாதத்துக்கும், அரசு பயங்கரவாதத்துக்கும் எதிராகப் போராடி முறியடிப்பதற்கு நாம் அழுத்தம் தருகிறோம்.

இதன்காரணமாகவே *சீக்கிய* மதவாதத்தையும், இசுலாமிய மதவாதத்தையும் நாம் ஆதரிப்பதாக கற்பித்துக் கொள்வது தவறாகும்.

''தேசிய இனப்பிரச்சினை என்பது விவசாயப் பிரச்சினை'' என்றார் ஸ்டாலின். ''இறுதி ஆய்வில் தேசிய இனப் போராட்டம் ஒரு வர்க்கப் போராட்டப் பிரச்சினை'' என்றார் மாவோ. ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாகிய இச்சகாப்தத்தில் தேசிய இன விடுதலைப் போராட்டம் என்பது உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஓர் அங்கமாகி விட்டது என்றார் லெனின். ஆகவே, ஒடுக்கப்பட்ட தேசிய இனம் அதன் முதலாளிகள், குட்டி முதலாளிகள், பாட்டாளிகள் ஆகிய எந்த வர்க்கத்தின் தலைமையில் திரண்டு சுயநிர்ணய உரிமைக்காகப் போராடினாலும், நியாயமானதுதான். வர்க்க சிந்தனையுடன் கூடிய ஒரு உழைப்பாளி அரசையோ, நிலையான ஜனநாயக அரசையோ ஏற்படுத்த மாட்டார்கள் என்பதற்காக பாட்டாளிகள் அல்லாதோர் தலைமையிலான சுய நிர்ணய உரிமைப் போராட்டங்கள் அநியாயமாகிவிட முடியாது. தேசிய இனங்களுக்கிடையே ஜனநாயகப் பூர்வமான உறவு நிறுவப்படுவது துரிதமான முன்னேற்றத்துக்கு இடமளித்து பாட்டாளிகளது புரட்சியை விரைவுபடுத்தும் என்பதால் நியாயமானதுதான்.

இந்திய தேசியம் என்று தனித்த எதுவும் இங்கே கிடையாது; தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகிய ஆளும் வர்க்கங்கள் பல்வேறு தேசிய இனங்களை அடக்கி ஒடுக்குவதற்காக உருவாக்க முயலுவதுதான் ''இந்திய தேசியம்''. இதன் ஒடுக்குமுறைக்கு எதிராக இன அடிப்படையில் சுய நிர்ணய உரிமைக்காகப் போராடுவது நியாயமானது அவசியமானது என்றே கருதுகிறோம். பிரிந்து போகும் உரிமை இல்லாத சுய நிர்ணய உரிமை என்பது பொருளற்றது. போலியானது, கேலிக்கூத்தானது ஆகும். பிரிந்து போவது அல்லது இணைந்திருப்பது ஆகிய இரண்டுக்குமான இயக்கம் நடத்தும் உரிமையையும் உள்ளடக்கியதுதான் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமையாகும். பிரிவினைவாதமென்று முன்னதையும், இன துரோகமென்று பின்னதையும் எதிர்ப்பதும் கூட அவ்வுரிமையை பொருளற்றது, போலியானது, கேலிக்கூத்தானது ஆக்கிவிடும். ''உல்ஃபா''வின் கீழ் அசாமும், ''ஜ.கா.வி.மு.''வின் கீழ் காஷ்மீரும் பிரிந்து போவதை நாம் விரும்புவதாகக் கருதுவது தவறு. பிரிந்து போவதா இல்லையா என்பதை அந்தந்த இன மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அதற்கான சுய நிர்ணய உரிமை அவர்களுக்கு வேண்டும் என்பதுதான் நமது நிலைப்பாடு. அந்த உரிமையை உத்திரவாதப்படுத்தும், நிலை நாட்டும் புதிய ஜனநாயகப் புரட்சிக்குப் பாட்டாளிகள் தலைமையில் திரளும்படிதான் நாம் அசாம், காஷ்மீர் மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறோம். ஆனால், அதற்காக இப்போது முன்னிலைக்கு வளர்ந்துவிட்ட இனவிடுதலைப் போராட்டத்தை அம்மக்கள் நிறுத்தி வைக்கவோ, தள்ளிப்போடவோ, கைவிடவோ, உடனடியாகப் புதிய ஜனநாயகப் புரட்சியாக மாற்றிவிடவோ கோர முடியுமா? முடியாது. ஆகவே இந்த அடிப்படையில் அசாம், காஷ்மீர் இன மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை ஆதரிப்பது சரியானதுதான்.

● நடுத்தர வர்க்கத்தினர் அனைவரிடமும் ''*பார்ப்பனக் கலாச்சாரம்*'' பரவுவதாக எழுதி வருகிறீர்கள்.பார்ப்பன. கலாச்சாரம் என்பதற்குத் தங்களுடைய நிலைப்பாடு - கொள்கையின்படியான வரையறை என்ன? ஏன் அதை எதிர்க்கிறீர்கள்? இன்றைய காலகட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது சாதிவெறித் தாக்குதல் தொடுக்காமல் இருப்பவர்கள் பார்ப்பனர்கள்தான்; ஆனால், நீங்கள் பார்ப்பனர்களை எதிர்த்து எழுதுகிறீர்கள். பொதுவாக மற்றவர்களைக் காட்டிலும் சுத்தமாக இருப்பது, சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வது, மலிவு விலை மதுவைக் குடித்துவிட்டு ரோட்டின் ஓரத்தில் விழாமல் இருப்பது இவற்றைப் பெரும்பாலான பார்ப்பனர்களும் மற்ற மேல் வகுப்பினரும் செய்வதில்லை. ஏழ்மையிலும் தூய்மை, நன்னடத்தையாக இருந்து இந்நாளில்சமூகத்திற்குக் கெடுதல் செய்யாத பார்ப்பனர்களைத் தாங்கள் கண்மூடித்தனமாகத் தாக்கி எழுதுவது நியாயமா?

— *சிவக்குமார், திருச்சி - 2.*

★ பார்ப்பனர்களைக் கண்ணை மூடிக்கொண்டு தாக்கி எழுதுகிறோம் என்று கூறுவது நியாயமில்லை. அப்படி இருந்தால், நமக்கும் தி.க. மற்றும் பிற பார்ப்பன எதிர்ப்பு இயக்கங்களுக்கும் வேறுபாடில்லை என்றாகிறது. இது உண்மையா? இல்லையே! உண்மை என்னவென்றால் கண் மூடித்தனமாக பார்ப்பனர்களை நாம் எதிர்ப்ப


படிப்பகம்

www.padippakam.com

தில்லை; இதற்காகத்தான் பார்ப்பனத்தனமானவர்கள், பார்ப்பனக் கைக்கூலிகள், பார்ப்பனத் தலைமை, இன துரோகிகள் என்றெல்லாம் நம்மீது முத்திரை குத்தி அவதூறு செய்வது நடக்கிறது. பின்வரும் காரணங்களுக்காக பார்ப்பனீயத்தை - பார்ப்பனக் கலாச்சாரத்தை நியாயமாக எதிர்க்கிறோம்.

'இந்து மதம்' என்பது ஆன்மீக ரீதியிலான மதம் - தெய்வீகம் என்பது மட்டுமல்ல; இந்த மக்களது வாழ்க்கை நெறிமுறை என்று அதன் மதாச்சாரியார்கள் அடிக்கடி கூறுகின்றனர். 'இந்து மதம்' என்பதே இசுலாமியரும், ஆங்கிலேயரும் வைத்த பெயர்தான் என்கிறது வரலாறு. சங்கராச்சாரியும் அதைத்தான் கூறுகிறார். ஆகவே இந்து மதம் என்பது உண்மையில் பார்ப்பன சனாதன மதம் தான். அது மக்களின் ஆன்மீக வாழ்க்கையை மட்டுமல்லாது ஒவ்வொரு மனிதரது பிறப்பு முதல் இறப்பு வரையிலான அவர்களது அரசியல், பொருளாதார, கலாச்சார, சமூக வாழ்க்கை நெறிமுறைகளை வரையறுத்துள்ளது. அந்த வரையறுப்புதான் பார்ப்பன சனாதன வருணாசிரம சாதிய ஒழுங்குமுறை. இந்த அடிப்படையிலான கலாச்சாரத்தையே ''பார்ப்பனக் கலாச்சாரம்'' என்கிறோம்.

பார்ப்பன சனாதனம் என்பது சமூகம் முழுவதையும் மேலிருந்து கீழாக, அடுக்கடுக்காக பிறப்பை வைத்து வருணாசிரம, சாதி அடிப்படையில் பிரிக்கிறது. அதன்படி பார்ப்பனர், சத்திரியர், வைசியர் ஆகிய வருணத்தார்களுக்கு மட்டுமே கல்வி, சொத்து, மத, சமூக உரிமை உண்டு. பார்ப்பன சனாதன மதத்துக்குள்ளாக வைத்துக் கருதப்பட்ட சூத்திர வருணத்தார்கள் முதல் மூன்று வருணத்தாருக்கு ஊழியஞ் செய்யும்படி விதிக்கப்பட்டனர். அம்மூன்று வருணத்துப் பெண்களும் கூட ஏறக்குறைய சூத்திரர்களின் நிலையில் வைக்கப்பட்டனர். இந்த ஏற்பாட்டுக்கு வெளியே தீண்டத்தகாதவர்களாக பஞ்சமர்களும் சண்டாளர்களும் என வேறு இரு பிரிவு மக்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர்.

**பார்ப்பனர்களாகப் பிறந்து விட்டாலே எதிரிகளாக நாம் கருதவில்லை. அப்படிக் கருதுவதும் வருணாசிரமக் கண்ணோட்டம்தான். அதுதான் தி.க. முதலிய பார்ப்பன எதிர்ப்பு இயக்கங்களின் நிலைப்பாடு. உழைக்கும் மக்களில் ஒரு பிரிவாக மாறிவிடும் பார்ப்பனர்கள் சனாதன ஆச்சாரத்தை எதிர்த்து கலகம் செய்து வெளியேற முடியும்; பார்ப்பன சனாதன வருணாசிரம, சாதிய முறையை நியாயப்படுத்தும் எல்லா வேத, உபநிசத, புராண, இதிகாசக் குப்பைகளையும் அவர்கள் இழிவானவைகளாக - அவமானங்களாகக் கருதித் தூக்கி எறிந்து விட வேண்டும். பார்ப்பன மற்றும் பிற மேல் சாதிக்காரர்கள் எல்லா வகையிலுமான தமது தனித்தன்மைகளைப் பேணுவதும் நியாயப்படுத்துவதும் கூடாது என்பதுதான் நமது நிலைப்பாடு.**

சமூகத்தின், தூய்மை, ஒழுக்கம், நடத்தை திருமண - குடும்ப வாழ்வு, ஆண் - பெண் உறவு போன்ற அனைத்தும் மேற்படி பார்ப்பன சனாதன, வருணாசிரம, சாதி அடிப்படையிலேயே வகுக்கப்பட்டிருந்தன. உதாரணமாக முதல் மூன்று வருணத்துப் பெண்களுக்கும் ''கற்பு'' கட்டாயமாக்கப்பட்டு, விதவையானால், சதி - உடன்கட்டை ஏற்றுவர்; அல்லது தலையை மழித்து காவி, வெள்ளைச் சேலையைச் சுற்றி மூலையில் வைப்பர்; அமங்கலிகளாக இழிவுபடுத்துவர்; மண் தேய்த்துக் குளிக்கும் இவர்களுக்கு பூ முதலிய வாசனைப் பொருட்கள் விலக்கி வைப்பர். இவ்வருணங்களின் ஆண்களுக்குப் பலதார மணமுறையும், கீழ்வருண - சாதிப் பெண்களைப் பெண்டாளவும் உரிமை உண்டு. இந்தப் பெண்களுக்கு ''கற்பு'' வலியுறுத்தப்படவே இல்லை. ஆனால், கீழ் வருண - சாதி ஆண்கள் மேல் வருண - சாதிப் பெண்களுடன் உறவு கொண்டாலோ கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர் — இதுதான் பார்ப்பன சனாதனம் போதிக்கும் ஒழுக்கம்! - முதல் மூன்று வருணத்தார் தூய்மையாக வாழ்வதற்காக தீட்டுச் சேலை துவைப்பது, சவரம் செய்வது, மலம் அள்ளுவது முதல் பிணம் எடுப்பது வரை பிற கீழ்வருண - சாதியினரின் கட்டாய அடிமை வேலைகளாகப் பணித்தனர். கீழ் வருண - சாதி மக்கள் பிரிவு ஒவ்வொன்றும் இவ்வளவு தூரம் தள்ளி இருக்க வேண்டுமென ஒதுக்கி வைத்து அவர்கள் தமது தூய்மையைப் பாதுகாத்துக் கொண்டனர். இவ்வளவும் பிறப்பால் தீர்மானிக்கப்படுகிறது என்றனர் — இதுதான் பார்ப்பன சனாதனத் தூய்மை.

இப்படி ஏராமான உதாரணங்கள் கூறலாம். ஆனால், இவையெல்லாம் பழைய கதை என்றும், தாங்கள் மாறிவிட்டதாகவும் சில பார்ப்பனர்கள் கூறுகின்றனர். ஆனால், நிர்ப்பந்தம் காரணமாக சில மாற்றங்களுடன் பார்ப்பன சனாதன முறைகள் நீடிப்பதோடு, அவற்றைக் கட்டிக் காப்பதற்கே முதல் மூன்று வருண - மேல் சாதிக்காரர்கள் முயலுகிறார்கள் என்பதுதான் உண்மை. இப்போதைய வாழ்க்கை முறை - கலாச்சாரத்துறை மற்றும் சமூக நெருக்கடிகள் வெடிக்கும் போதெல்லாம் பார்ப்பன சனாதன ஆச்சாரங்களில் இருந்து வழுவியது தான் காரணம் என்று கூறுவதோடு அவற்றைப் புதுப்பிக்கவே முயலுகின்றனர். பார்ப்பனத் தலைமையிலான ஆர்.எஸ்.எஸ்.ஸின் வகுப்புவாதம், சதி உடன்கட்டை முறையைப் புதுப்பிப்பது, கோவில் அர்ச்சகர் - தர்ம கர்த்தாக்களாகத் தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிக்க மறுப்பது, என்று இதற்குப் பல சான்றுகள் கூற முடியும். பெண்களைப் பற்றி உச்ச ''நீதி''மன்ற தலைமை ''நீதி''பதி ரங்கநாத மிஸ்ராவும், சதி மற்றும் அம்பேத்கார் பற்றி பூரி சங்கராச்சரியும் பேசியவை அதற்கு வெளிப்படையாக நாம் பார்ப்பது. மாற்றங்களை வரவேற்பதாகவும் சாதி ஏற்றத்தாழ்வுகளை எதிர்ப்பதாகவும் கூறிவரும் காஞ்சி சங்கராச்சாரி போன்றவர்கள் பார்ப்பனர்கள் மட்டுமே கூடும் கூட்டங்களில் தங்கள் சாதிவரைக்குமாவது சனாதன ஆச்சாரத்தின் படி ஒழுகுமாறு வலியுறுத்துவது இரகசியமாக நடப்பது. குஜராத் கோவிலுக்குப் போன தாழ்த்தப்பட்டோரை அடித்து விரட்டியது, அலகாபாத்தில் ஜெகஜீவன்ராம் திறந்து வைத்த சிலைக்கு யாகம் நடத்தித் ''தீட்டு நீக்கிப் புனிதமாக்கியது'' போன்றவை பார்ப்பன சனாதனத்தின் வெறியையும், வக்கிரத்தையும் காட்டவில்லையா?

சினிமா, பத்திரிக்கைகள், வானொலி, வானொளி போன்ற மக்கள் திரள் தொடர்புச் சாதனங்கள் பார்ப்பன மற்றும் பிற மேல்சாதியினரின் ஆதிக்கத்தில் உள்ளன. அவர்கள் திட்டமிட்டு பார்ப்பன சனாதனத்தைப் புதுப்பிக்கவும், நவீன மூலாம் பூசிப் பரப்பவும் முயலுகின்றனர் என்பதற்கும் சான்றுகள் கூற முடியும். பார்ப்பன புரோகிதம் வைத்து திருமண, திவச சடங்குகளை நடத்துவதே தமிழர் பண்பாடென சினிமாவில் காட்டுகின்றனர். கெடுக்கப்பட்ட அல்லது கெட்டுப்போன பெண்களை வைத்து சதி - உடன்கட்டை கதைகளைப் பத்திரிகைகள் எழுதுகின்றன. சமஸ்கிருத - பார்ப்பன மயமாகியுள்ள வானொலியும், வானொளியும் பார்ப்பனக் குடும்பக் கதைகள், நாடகங்கள், இசைகளையே ஒலி - ஒளி பரப்புகின்றன.

இவ்வாறு பார்ப்பன சனாதன, வருணாசிரம, சாதிய முறையை நேரடியாகவும், மறை முகமாகவும், கட்டிக் காத்து புதுப்பிக்க முயலுவதையும், அதை ஏற்றுக் கொள்ளும் பார்ப்பனர்களையும்தான் பு.ஜ. தாக்கி எழுதுகிறதே தவிர கண்மூடித்தனமாக எல்லாப் பார்ப்பனர்களையும் எதிர்க்கவில்லை. பார்ப்பனர்களாகப் பிறந்துவிட்டாலே எதிரிகளாக நாம் கருதவில்லை. அப்படிக் கருதுவதும் வருணாசிரமக் கண்ணோட்டம்தான். அதுதான் தி.க. முதலிய பார்ப்பன எதிர்ப்பு இயக்கங்களின் நிலைப்பாடு. உழைக்கும் மக்களில் ஒரு பிரிவாக மாறிவிடும் பார்ப்பனர்கள் சனாதன ஆச்சாரத்தை எதிர்த்து கலகம் செய்து வெளியேற முடியும்; பார்ப்பன சனாதன வருணாசிரம, சாதிய முறையை நியாயப்படுத்தும் எல்லா வேத, உபநிசத, புராண, இதிகாசக் குப்பைகளையும் அவர்கள் இழிவானவைகளாக - அவமானங்களாகக் கருதித் தூக்கி எறிந்து விட வேண்டும். இவற்றின் கீழ் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த கீழ்வருண - சாதி மக்களிடம் பார்ப்பனக் கலாச்சார அடிப்படையிலான தூய்மை, நன்னடத்தை, ஒழுக்கத்தை எதிர்பாராது அவர்களுடன் சகல வகைகளிலும் ஐக்கியப்பட்டு வாழ வேண்டும்; பார்ப்பன மற்றும் பிற மேல் சாதிக்காரர்கள் எல்லா வகையிலுமான தமது தனித்தன்மைகளைப் பேணுவதும் நியாயப்படுத்துவதும் கூடாது என்பதுதான் நமது நிலைப்பாடு.

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

தேர்தல் வந்துவிட்டால் ஆந்திராவின் கடப்பா நகரைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. காரணம், நாட்டு வெடிகுண்டு தயாரிக்கும் தொழிலுக்கு இத்தேர்தல் நேரத்தில் திடீர் கிராக்கி ஏற்பட்டு விடும். பொருளாதார ரீதியில் பின்தங்கிய இப்பகுதிவாழ் மக்களுக்கு கள்ளத்தனமாக தயாரிக்கும் நாட்டு வெடிகுண்டுகள் பிழைப்புக்கான தொழிலாக உள்ளது. தேர்தல் நேரத்தில் குக்கிராமங்களில் கூட இத்தொழில் கள்ளச்சாராயத் தொழிலைப் போல் பரவிவிடுகிறது. ஒரு குண்டு ரூ.25 ரூ.100 வரை விற்கப்படுகிறது. இதற்காக உள்ள ஏஜெண்டுகள் மூலம் கிருஷ்ணா மாவட்டத்துக்கும் பின்னர் அங்கிருந்து இதர நகரங்களுக்கும் கடத்திச் சென்று ஓட்டுக்கட்சிகளுக்கு ரகசியமாக விநியோகிக்கப்படுகிறது.

புரட்சி, சோசலிசம், பொதுத்துறை முதலான கொள்கைகளைப் பேசி வந்த வலது கம்யூனிஸ்டுகள் இப்போது அவற்றை மூட்டை கட்டி வைத்துவிட்டு, ராஜீவ் - சந்திரசேகரின் கொள்கைகளை வெளிப்படையாக ஆதரிக்கத் தொடங்கியுள்ளனர். வலதுகளின் அதிகாரப் பூர்வ ஏடான ''நியூ ஏஜ்'' மார்ச் 17 இதழில் சதுரனன் மிஸ்ரா என்ற முன்னாள் எம்.பி. ''பொதுத்துறையில் நட்டத்தை அனுமதிக்க முடியாது. அதைத் தவிர்க்க தனியாருக்கு கொடுப்பதில் தவறில்லை. உலக வங்கியின் உதவியை நாம் வரவேற்க வேண்டும்'' என்று எழுதியுள்ளார். மார்ச் 24 இதழில் வலதுகளின் தேசிய கவுன்சில் உறுப்பினரான அனில் ராஜிம்வாலே, ''இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றிய நமது கண்ணோட்டத்தை மாற்ற வேண்டும். அரசு மானியங்களைக் குறைக்க வேண்டும். குருட்டுத்தனமாக தேசிய மயமாக்கலை ஆதரிக்கக் கூடாது. அரசுத்துறையை தனியாருக்குத் தருவதில் தவறில்லை. சோசலிச நாடுகள் மட்டுமின்றி பிற நாடுகளிடம் உதவி பெறுவதில் தவறில்லை'' என்று எழுதியுள்ளார். ஆளும் வர்க்கப் பொருளாதாரக் கொள்கைக்கு மாற்றான புதிய கொள்கைகள் எதுவும் போலிக் கம்யூனிஸ்டுகளிடம் கிடையாது என்று நாம் எழுதினோம். அது உண்மைதான் என்பதை இப்போது நிரூபித்து வருகிறார்கள்

கடந்த ஆண்டுகளில சென்னை அருகிலுள்ள கல்பாக்கம் அணு மின் நிலையம் வரையறுக்கப்பட்ட திறனைவிட மிகக் குறைவாக மின் உற்பத்தி செய்து பெரும் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ச்சியாக இயந்திரக் கோளாறு, பழுது காரணமாக நாளொன்றுக்கு ஏறத்தாழ 6.5 லட்ச ரூபாய் இதனால் பாழாகியுள்ளது.

ஆந்திராவின் பிரபல பத்திரிக்கை முதலாளி ராமோஜி ராவ் தயாரித்துள்ள ''மக்களின் மோதல்'' (பீப்பிள்ஸ் என்கௌண்டர்) என்ற திரைப்படம் அண்மையில் வெளியாகியுள்ளது. நக்சல் பாரிகளை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள இப்படத்தில் அவர்கள் வன்முறையாளர்களாக சித்தரிக்கப்படுகின்றனர். தோழர் கத்தார் அங்கம் வகிக்கும் ஜனநாட்டிய மண்டலியின் புரட்சிகர பாடல்களை அப்படத்தில் கேடாகப் பயன்படுத்தியுள்ளனர். புரட்சியாளர்கள் மீதான போலீசாரின் அடக்குமுறையைப் பற்றி இப்படத்தில் எதுவுமில்லை. அதே சமயம் தட்சிண எக்ஸ்பிரஸ் ரயிலைக் கொளுத்தி 50க்கும் மேற்பட்டோரைக் கொன்றதாக நக்சல்பாரிகள் மீது இப்படம் வீணாக பழிசுமத்தியுள்ளது. இதை எதிர்த்து புரட்சியாளர்கள் தலைமையிலான ''மக்கள் கோர்ட்''டில் ஜனநாட்டிய மண்டலி முறையிட்டுள்ளது. மக்கள் கோர்ட், இப்படத் தயாரிப்பாளருக்கு கண்டன நோட்டீசு அனுப்பி, படத்தை திரையிடக் கூடாது என்றும், மீறினால் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளது.

கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்காக உருவாக்கப்பட்ட வேலை உத்திரவாதத் திட்டம் (RLEGP) கூலி - ஏழை விவசாயிகளுக்கு ஒரு மண்ணும் செய்யவில்லை 1989-ம் ஆண்டில் பீகார் மாநிலத்திற்கு இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 80 கார்கள் - ஜீப்புகள், குளிர்பதன சாதனங்கள், மின்விசிறி, மேசை, நாற்காலிகள் என ஏறத்தாழ 5 கோடி ரூபாய் அளவுக்கு அலுவலகத் தேவைக்காக அதிகார வர்க்கம் பாழடித்துள்ளது. உ.பி.யில் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை வங்கியில் சேமிப்பில் போட்டு வட்டியை அதிகார வர்க்கம் சுருட்டிக் கொண்டுள்ளது. விவசாயிகளின் வறுமையில் அதிகார வர்க்கம் குளிர் காய்வதுதான் இத்திட்டத்தின் பலனாக உள்ளது என்று அரசின் பொதுக் கணக்கு தணிக்கை அதிகாரியே வெளிப்படையாக குற்றம் சாட்டியுள்ளார்.

பம்பாய் கடத்தல் காரர்கள் ஒரு கூட்டமைப்பை ரகசியமாக நிறுவிக் கொண்டுள்ளனர். உள்நாட்டு விமானப் போக்குவரத்தை தனியார் துறைக்கு தாரை வார்க்க அரசு முடிவு செய்துள்ளதை ஒட்டி, இத்துறையில் முதலீடு செய்வதென தமது கூட்டமைப்பில் முடிவு செய்துள்ளனர். உள்நாட்டு விமானப் போக்குவரத்தை ஏகபோகமாக தம்பிடியில் வைத்துக் கொண்டால் கடத்தல் தொழிலை விரைவாகவும் சுலபமாகவும் செய்யலாம்; அதோடு வெளிநாட்டு தனியார் விமான கம்பெனிகளின் மூலம் கடத்தல் சரக்கை விரைவாக வெளிநாடுகளுக்கு கடத்தலாம் என்று கணக்கு போட்டு தமது பினாமிகள் மூலம் இத்தொழிலில் இறங்க முடிவு செய்துள்ளனர். அரசின் கொள்கையால் இனி கடத்தலும் சட்டபூர்வத் தொழிலாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் கடைசி கூட்டத்தில் அனைத்து எம்.பி.க்களும் தமது ஊதியம், படிகளை உயர்த்திக் கொண்டுள்ளனர். இது தவிர, ஓராண்டுக்கு 50,000 முறை இலவசமாக போன் செய்யவும், இலவசமாக ரயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்வதற்கும் சட்டமியற்றிக் கொண்டுள்ளனர். மேலும் எம்.பி.களுக்கான பென்ஷன் தொகையை மாதம் ரூ.500லிருந்து 1250 ரூபாயாக உயர்த்திக் கொண்டுள்ளனர். மக்கள் சேவை என்ற பெயரில் 15 மாதங்களுக்கு நாடாளுமன்றத்தில் நாற்காலியைத் தேய்த்ததற்குத்தான் இத்தனை சலுகைகள்! சன்மானங்கள்!

பம்பாயில் இனவெறி கட்சியான சிவசேனா அச்சுறுத்தும் சக்தியாக வளர்ந்துவிட்டது. கடைக்காரர்களிடம் மாமூல் வசூலிப்பதும் தர மறுப்பவர்களை சிவசேனாவின் குண்டர்படை தாக்குவதும் பம்பாயில் அதிகரித்து வருகிறது. வரப்போகும் தேர்தலை ஒட்டி இப்போதே கப்பம் கட்டுமாறு வர்த்தகர்களை சிவசேனா மிரட்டுகிறது. பீதியடைந்த வியாபாரிகள் அடிக்கடி மாமூல் கொடுத்து தொல்லைப்படுவதைவிட, மொத்தமாக கப்பம் கட்ட முடிவு செய்து சிவசேனாவுடன் பேரம் நடந்துகின்றனர். இதற்கென சிவசேனா தலைவர் பால்தாக்கரே முன்னிலையில் ஒரு நட்சத்திர ஓட்டலில் கூட்டமும் நடந்துள்ளது.

வளைகுடா போரின் போது பர்மாவிலிருந்து இந்தியா மூலமாக தினமும் 25 கிலோ அளவுக்கு ஹெராயின் போதை மருந்து துபாய்க்கு கடத்தப்பட்டுள்ளது. இவை போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் போர் வீரர்களுக்காக சௌதி அரேபிய அரசின் உடந்தையுடன் நடந்துள்ளது என்று மணிப்பூரைச் சேர்ந்த போதை மருந்து ஒழிப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரியே ஒப்புக்





படிப்பகம்

www.padippakam.com

கொண்டுள்ளார். அமெரிக்கப் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பி சேவை செய்தது சந்திரசேகர் அரசு. அமெரிக்கப் போர்வீரர்களுக்கு போதை மருந்துகடத்தி சேவை செய்துள்ளனர் இந்திய கடத்தல்காரர்கள். இதனால்தான் இப்போரில் இந்தியாவின் நிலையை அமெரிக்கா பாராட்டுகிறது போலும்.



போலிக் கம்யூனிஸ்டுகளால் சோசலிச நாடாக சித்தரிக்கப்பட்ட கிழக்கு ஜெர்மனி, மே.ஜெர்மனியுடன் இணைந்த பிறகு அங்கேயும் இனவெறித் தாக்குதல்கள் அதிகரித்து விட்டது. நவீன நாஜிக் குழுக்களைச் சேர்ந்த மொட்டைத் தலையர்கள் இட்லரின் ஸ்வஸ்திக் சின்னத்தை அணிந்து கொண்டு, கி.ஜெர்மனியின் லீஸ்னிக் நகரில் வசிக்கும் இந்திய, பாகிஸ்தானிய, வியட்நாமிய மக்கள் மீது காட்டுமிராண்டித் தனமான தாக்குதலை கடந்த மாதத்தில் நடத்தியுள்ளனர். அவர்களது வீடுகளைச் சூறையாடி, முதியோர் - குழந்தைகளைக் கூட இரும்புத் தடியால் தாக்கியுள்ளனர். ஜெர்மன் ஐக்கியம் மாபெரும் ஜனநாயகத்தை மலரச் செய்துள்ளது என்று ஏகாதிபத்திய வாதிகள் பெருமைப்படுகிறார்கள். உண்மையில் அங்கு இனவெறியர்களுக்குத்தான் ஜனநாயகம் உள்ளது என்பதை இச்சம்பவம் நிரூபித்துவிட்டது.

முகம்மது ஷாபி என்பவன் மத்தியப் பிரதேசத்தின் பிரபலமான அபின் கடத்தல்காரன். ஆண்டுக்கு 25 டன் அளவுக்கு போதை மருந்து கடத்தும் இவனைக் கைது செய்யவே முடிவதில்லை. காரணம், இவன் ஓட்டுக்கட்சித் தலைவர்களின் கூட்டாளி. மத்திய பிரதேசத்தில் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்ததும், முதல்வர் பட்வாவுடன் இவன் நெருக்கமாக ஒட்டிக் கொண்டான். பட்வாவும் தனது சொந்த ஊரைச் சேர்ந்த இக்கடத்தல்காரனுடன் உறவைப் புதுப்பித்துக் கொண்டு கொள்ளையில் பங்கு போட்டுக் கொண்டார். பட்வாவின் மனைவி, மகன், சகோதரர்களுக்கு ஆளுக்கொரு வீடு கட்டிக் கொடுத்து தனது விசுவாசத்தைக் காட்டியுள்ளான் இந்தக் கடத்தல்காரன். இதற்கு கைமாறாக, மருந்துக்குப் பயன்படுத்தப்படும் கஞ்சா மீது இருந்த எக்சைஸ் வரியை ரூ.50லிருந்து 5 ரூபாயாக குறைத்து இக்கடத்தல்காரனுக்கு உதவியுள்ளார் முதல்வர் பட்வா. ஒழுக்கம் - கட்டுப்பாடு மிக்க கட்சியாக பீற்றிக் கொள்ளும் பாரதீய ஜனதா ஆட்சியின் லட்சணம் இதுதான்!

கேரளாவின் தொழிற்துறை மந்திரியான கே.ஆர்.கௌரி அம்மையாருக்கு 74 வயதாகிறது. அண்மையில் நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் சபாநாயகர் ராதாகிருஷ்ணன், "உங்கள் தலைமுடி ஒன்றுகூட நரைக்கவில்லையே! எனக்கு 64 வயதுதான் ஆகிறது. ஆனால் எனது மயிர் நரைத்துவிட்டது" என்று அவரது இளமையைப் புகழ்ந்தார். உடனே கேரள காங்கிரசு (மணி கோஷ்டி) கட்சியைச் சேர்ந்த ஜாகோப், "நரை முடிதான் மூப்பின் தன்மையைக் காட்டுகிறதா?" என்ற சந்தேகத்தை எழுப்பினார். "உங்கள் வயதுக்கு இது தேவையில்லாத சந்தேகம்" என்று அவருக்கு பதிலளித்தார் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் பாலகிருஷ்ணன். இப்படி சூடேறிய விவாதத்தை பட்ஜெட் கூட்டத் தொடரில் ஓட்டுக்கட்சிகள் காரசாரமாக நடத்தின. எப்படி இருக்கிறது இவர்களின் மயிர் அரசியல்?!

ஜப்பானின் குங்ஃபூ, கராத்தே போன்ற தற்காப்பு போர்க் கலைகள் உலகெங்கும் பெருமையாக வரவேற்கப்படுகிறது. ஆனால் ஜப்பானின் "யமகுச்சி - குமி" என்ற ஒருவகை குழுவினர் இத்தற்காப்புப் பயிற்சிகளின் மூலம் கிரிமினல் - மாஃபியா கும்பலாக வளர்ந்து அந்நாட்டையே இப்போது அச்சுறுத்துகின்றனர். பெரிய தொழில் நிறுவனம் போல 30,000 பேரையும் 800 கிளைகளையும் கொண்டு நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு, கிரிமினல் குற்றங்களைச் செய்து கொள்ளையடிப்பதையே இக்கும்பல் தொழிலாகக் கொண்டுள்ளது. சூதாட்டம், ரியல் எஸ்டேட், பங்குச் சந்தை ஏலம், திருட்டு, வங்கிக் கொள்ளை, கடத்தல் கற்பழிப்பு, தொழிலாளர் போராட்டங்களை அடக்குவது முதலானவற்றின் மூலம் ஆண்டுக்கு 1,700 கோடி ரூபாய் வரை இக்கும்பல் லாபம் ஈட்டுகிறது. எதற்கெடுத்தாலும் ஜப்பானின் முன்னேற்றத்தைப் பார் என்று உபதேசிக்கும் முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் இதை எப்படி நியாயப்படுத்துவார்களோ?



பாசிச இந்திராவின் படுகொலையை ஒட்டி 1984-ல் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட சீக்கிய மக்களுக்கு இன்று வரை எந்த விவாரணமும் வழங்கப்படவில்லை.

டெல்லி - திலக் விஹார் பகுதியில் துணிகளால் ஆன கூடாரத்தில் வெயிலிலும் குளிரிலும் அவதிப்படும் இம்மக்களுக்கு, வீடு கட்டிக் கொள்ள ரூ.20,000 வழங்குவதாக அரசு அறிவித்திருந்தது. ஆட்சிகள் மாறியும் கூட எந்த அரசும் அதை நிறைவேற்றவில்லை. போதிய சுகாதார வசதி - மருத்துவ வசதியின்மையால் கடந்த ஏழாண்டுகளில் நூற்றுக்கணக்கான மக்கள் இங்கு மாண்டனர். கடந்த 6 மாதங்களில் மட்டும் 85 பேர் நோயினால் இறந்தனர். அகதிகளாக அல்லற்படும் சீக்கியர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதியும் தரப்படவில்லை.

இனியும் இந்த அரசையும் ஓட்டுக் கட்சிகளையும் நம்புவதில் பலனில்லை என்று முடிவு செய்த இம்மக்கள் தமது தட்டு முட்டுச் சாமான்களுடன் கடந்த மார்ச் 21 அன்று குடும்பத்தோடு பஞ்சாபை நோக்கி நடை பயணமாகச் செல்கிறார்கள். ஒருபுறம் டெல்லியிலே சீக்கியர்கள் அகதிகளாக அல்லற்படுகிறார்கள். மறுபுறம், சீக்கியர் மீதான நரவேட்டைக்கு தலைமையேற்று நடத்திய பகத் முதலான காங்கிரசு கொலைகாரர்கள், மந்திரி பதவி பெற்றதோடு எவ்வித வழக்குமின்றி சுதந்திரமாக உலாவுகிறார்கள்.

பாகிஸ்தானின் போதை மருந்துக் கடத்தல் அமெரிக்காவுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. அமெரிக்காவுக்குள் நுழையும் ஹெராயின் போதை மருந்தில் 75% பாகிஸ்தான் மூலமாகத்தான் கடத்தப்படுகிறது. பாக். பட்ஜெட்டை விட இருமடங்கு அதிகமான அளவுக்கு கடத்தல் வியாபாரம் கொடிகட்டிப் பறக்கிறது. கடத்தல் காரர்கள் இணையான அரசு நடத்துமளவுக்கு வளர்ந்துவிட்டார்கள் என்று அமெரிக்காவே இப்போது குற்றம் சாட்டியுள்ளது. போதை மருந்து கடத்தல் தலைவன் அயூப்பை மந்திரி யாக்கியுள்ள நவாஸ் ஷெரீபின் ஆட்சியில் பாகிஸ்தான், இன்னுமொரு கொலம்பியாவாக மாறிவருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# உடைந்து சிதறும் யூகோஸ்லாவியா:

# டிட்டோயிசத்தின் தோல்வி

**முதலாளித்துவத்தைப் பாதுகாத்துக் கொண்டே சோசலிசம்; ஏகாதிபத்தியத்துடன் சமாதான சகவாழ்வு போன்ற போலிக் கம்யூனிச கொள்கைகளின் முன்னோடி டிட்டோ. ரஷிய - கிழக்கு ஐரோப்பிய வீழ்ச்சியை டிட்டோயிசமும் பின்தொடர்கிறது.**

வளைகுடா யுத்தம் மட்டும் இல்லையென்றால் உலகப் பத்திரிக்கைகளின் முதல் பக்கத்தை யூகோஸ்லாவியா பிடித்துக் கொண்டிருக்கும். உள்நாட்டு அரசியல் பொருளாதார நெருக்கடிகளாலும் தேசிய இனங்களுக்கிடையேயான மோதலாலும் யூகோஸ்லாவியா சிதைந்து கொண்டிருக்கிறது. ''ரசிய, சீன பாணி கம்யூனிசத்திலிருந்து வேறுபட்டது; மனித முகம் கொண்ட சோசலிசம்; ஜனநாயக உரிமையுடன் கூடிய கம்யூனிசம்'' என்று யாரெல்லாம் யூகோஸ்லரவியாவையும் அதன் முன்னாள் அதிபர் டிட்டோவையும் பாராட்டினார்களோ, ''முதலாளித்துவ முறைக்கும் கம்யூனிச முறைக்கும் இடைப்பட்ட அற்புதமான முறை'' என்று யாரெல்லாம் ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார்களோ அவர்கள்தான் இன்று தங்கள் பல்லவியையே மாற்றிப் பாடுகிறார்கள். ''தலை விழுந்தால் எனக்கு வெற்றி, பூவிழுந்தால் உனக்குத் தோல்வி'' என்ற பாணியில் யூகோஸ்லாவியாவின் இன்றைய நெருக்கடியை கம்யூனிசத்தின் தோல்வியாகவே சித்தரிக்கிறார்கள்.

ரசியாவின் பால்டிக் குடியரசுகள் முன்வைக்கும் பிரிவினைக் கோரிக்கை, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் போலி கம்யூனிசத்தின் தோல்வி, முதலாளித்துவ அரசுகளின் தோற்றம் - ஆகிய இவ்விரண்டு நிகழ்ச்சிப் போக்குகளும் இணைந்த கலவையாக யூகோஸ்லாவிய நெருக்கடி வடிவெடுத்திருக்கிறது.

ஏறத்தாழ ஆந்திர மாநிலத்தின் அளவுக்கு நிலப்பரப்பைக் கொண்ட யூகோஸ்லாவியாவின் மொத்த மக்கள் தொகை 2.35 கோடி. மொழி, மத, இன ரீதியாக இந்த மக்கட் தொகையே பல பிரிவுகளாக உள்ளது. செர்புகள் - 36%, குரோட்டுகள் - 20%, ஸ்லோவென் - 8%, மாசிடோனியர்கள் - 6%. மற்றும் பல்வேறு இனங்களும், மதச் சிறுபான்மையினராக முஸ்லீம்களும் உள்ளனர். மேற்கூறிய நான்கு பிரிவினரும் பொதுவாக தெற்கு ஸ்லாவிய இனத்தினர் என்று அழைக்கப்பட்டாலும் வரலாற்று ரீதியாகவும், அரசியல், பண்பாட்டு ரீதியாகவும் இவர்களுக்கிடையே பல வேறுபாடுகள் உண்டு.

பண்டைக் காலத்தில் ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த இன்றைய யூகோஸ்லாவியா, அதன் பின்னர் மத்திய காலத்தில் பல்வேறு தனித்தனி நாடுகளாக பல மன்னர்களால் ஆளப்பட்டது. பின்னர் 15ம் நூற்றாண்டு முதல் நாட்டின் பெரும்பகுதி துருக்கியின் ஓட்டோமான் பேரரசின் கீழ் வந்தது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் செர்பிய இனம் துருக்கி ஆட்சியை விரட்டித் தனது ஆட்சியை நிறுவியது. செர்பிய மன்னன் அலெக்சாண்டரின் ஆட்சியில் 1921 இல்தான் 'தெற்கு ஸ்லாவியர்களின் நாடு' எனப் பொருள்படும் யூகோஸ்லாவியா என்ற பெயர் இந்நாட்டுக்குச் சூட்டப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது ஜெர்மனியின் நாஜிப்படைகளால் கைப்பற்றப்பட்ட யூகோஸ்லாவியாவை டிட்டோவின் தலைமையிலான தேசிய விடுதலை ராணுவம் ரசிய செம்படையின் உதவியுடன் மீட்டது. நவம்பர் 1945 இல் ''யூகோஸ்லாவிய மக்கள் குடியரசுகளின் கூட்டமைப்பு'' பிரகடனம் செய்யப்பட்டது.

குரோசியா, மாசிடோனியா, மாண்டெனெக்ரோ, செர்பியா, ஸ்லோவேனியா, போசினா - ஹெர்செகோவினா ஆகிய ஆறு 'சோசலிச'க் குடியரசுகளையும், செர்பியாவுக்குள் அடங்கிய கொசோவோ, வோஜ்வோடினா ஆகிய தன்னாட்சிப் பிராந்தியங்களையும் கொண்ட யூகோஸ்லாவியா இன்று தனித்தனி நாடுகளாக உடைந்து சிதறும் நிலை தோன்றியுள்ளது. ''ரசியாவைப் போலன்றி பல்வேறு தேசிய இனங்களுக்கும் உண்மையிலேயே சுதந்திரம் அளிக்கும் அரசமைப்பைக் கொண்டது'' என முதலாளித்துவ அறிஞர்களால் கொண்டாடப்பட்டும் டிட்டோவின் காலத்திலிருந்தே இனப் பூசல் அவ்வப்போது வெடித்த வண்ணம் இருந்திருக்கிறது.

தற்போது கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிசங்களின் வீழ்ச்சியின் எதிரொலியாக முழுமையான முதலாளித்துவத்துக்கு மாறக் கோரும் போராட்டமும் சேர்ந்து கொண்டிருக்கிறது. நாட்டின் பெரும்பான்மை ஆதிக்க தேசிய இனமாகவும், போலி கம்யூனிஸ்டுகளின் தளமாகவும் உள்ள செர்பியாவுக்கு எதிரான பிற குடியரசுகளின் போராட்டமாக இது வெளிப்படுகிறது.

ஸ்லோவேனியக் குடியரசு சென்ற பிப்ரவரி மாதம் யூகோஸ்லாவியா விலிருந்து பிரிந்து செல்வதென தனது பாராளுமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேறியுள்ளது. தனது அரசியல் சட்டத்தில் யூகோஸ்லாவியா என்ற சொல்லே இல்லாமல் நீக்குவதென்றும், தனியே நாணயங்கள் அச்சிடுவதென்றும் தனது நாணயத்தை ஜெர்மனி அல்லது ஆஸ்திரிய நாணயத்துடன் இணைப்பது என்றும், ஐ.நாவில் தனி உறுப்பினராக விண்ணப்பிப்பது என்றும் முடிவு செய்துள்ளது. ராணுவ அடக்கு முறையை எதிர்நோக்கி தனது சொந்த ராணுவத்தை கட்டியமைக்கவும் தொடங்கியுள்ளது. சென்ற ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்த ஸ்லாவேனிய கம்யூனிஸ்டு கட்சி தான் யூகோஸ்லாவிய கட்சியிலிருந்து துண்டித்துக் கொள்வதாக அறிவித்து விட்டது.

குரோசிய குடியரசு சென்ற டிசம்பர் மாதம் நிறைவேற்றிய தீர்மானம் ஏறத்தாழ இதைப் போன்றதே. ''குடியரசுகளிடையே புதிய ஒப்பந்தம் ஏற்படும் வரை அல்லது நமது பாராளுமன்றம் வேறு விதமாக முடிவு செய்யும் வரைதான் குரோசியாயூகோஸ்லாவியில் நீடிக்கும்'' என்பது அத்தீர்மானம். குரோசியாவின் இந்த முடிவுக்கு வஞ்சம் தீர்க்கும் விதத்தில் யூகோஸ்லாவிய கூட்டரசில் ஆதிக்கம் செலுத்தும் செர்பியா பதிலடி கொடுத்தது. குரோசியாவில் வாழும் 6 லட்சம் செர்பியர்கள் இழிவு படுத்தப்படுவதாகவும் அவர்கள் தனிக் குடியரசாகப் பிரிந்து செல்வார்கள் என்றும் மிரட்டியது.

இந்த மிரட்டலை அமல்படுத்தும் விதத்தில் குரோசியாவிலுள்ள செர்பியர்கள் அதிகம் வாழும் பாக்ராக் எனும் நகரத்தின் கவுன்சில் தங்களது நகரம் செர்பியாவிலிருந்து பிரிந்து செல்வதாக அறிவித்தது. குரோசியாவின் தென்பகுதியிலுள்ள செர்பியர்கள் அதிகம் வாழும் பிராந்தியமும் தான் குரோசியாவிலிருந்து பிரிந்து போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தது. இதனால், ஆத்திரம் கொண்ட குரோசியக் குடியரசு தனது போலீஸ் படையை அனுப்பி பாக்ராக் நகரின் செர்பிய போலீஸ்காரர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்தது. எதிர் நடவடிக்கையாக யூகோஸ்லாவிய அரசு குரோசிய போலிசின் மீது ராணுவத்தை ஏவியது. ஆயுத மோதலுக்கு அஞ்சி குரோசிய போலீசு பாக்ராக் நகரிலிருந்து பின் வாங்கியது. ஆனால், இச்சம்பவம் குரோசியா முழுவதும் பெரும் கொந்தளிப்பை தோற்றுவித்தது. குரோசியாவும் தனக்கென தனியே ராணுவத்தைக் கட்டுகிறது.

மாசிடோனியா குடியசில் சென்ற ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 'கம்யூனிஸ்டுகளை' முறியடித்து வெற்றி பெற்ற மாசிடோனிய புரட்சி இயக்கம் தமது குடியரசும் யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிய விரும்புவதாகவும் பல்கேரியா, கிரீஸ், அல்பேனியா போன்ற நாடுகளிலுள்ள சிறுபான்மை மாசி

படிப்பகம்

www.padippakam.com

டோனியர்களுடன் இணைந்து தனிநாடு உருவாக்க விரும்புவதாகவும் கூறுகிறது.

மான்டெனெக்ரோ குடியரசின் சார்பில் யூகோஸ்லாவிய கூட்டமைப்பின் தலைமைக்குழுவில் அங்கம் வகிக்கும் நெனாட் புசின் ''நாட்டின் சிதைவுக்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன்'' என்று கூறி ராஜினாமா செய்துள்ளார்.

செர்பியக் குடியரசுக்குட்பட்ட தன்னாட்சிப் பிராந்தியமான கொசோவாவில் செர்பிய ஆதிக்கத்துக்கு எதிராக கலகங்கள் வெடித்துள்ளன.

இனரீதியாக வெளிப்படும் இத்தகைய முரண்பாடுகள் ஒருபுறமிருக்க சென்ற ஆண்டு நடைபெற்ற 'சுதந்திரத்' தேர்தலில் 4 குடியரசுகளில் போலி கம்யூனிஸ்டுகள் படுதோல்வியடைந்துள்ளனர். செர்பியாவில் போலி கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றிருந்தும், போலி கம்யூனிஸ்டு ஆட்சியாளர்களுக்கு எதிராகவும், வெளிப்படையான முதலாளித்துவப் பாதையாளர்களுக்கு ஆதரவாகவும் செர்பியாவில் (தலைநகர் பெல்கிரேடில்) பிரம்மாண்டமான மாணவர் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. இரண்டு மாணவர்கள் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.



செர்பியக் குடியரசு மக்களின் 'சுதந்திர'த்திற்கான ஆர்ப்பாட்டம்.

கம்யூனிசத்தின் பெயரால் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள இயலாமல் போனதால், ''நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்க வல்லவர்கள் செர்பியர்கள் தான்'' என்று செர்பிய பேரின வாதத்தைத் தூண்டிவிட்டு அதன்மூலம் அதிகாரத்தில் நீடிக்க போலி கம்யூனிஸ்டுகள் முயல்கின்றனர். ஸ்லோவேனியப் பொருட்களை புறக்கணிக்குமாறு யூகோஸ்லாவிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மிலோசெவிக் பகிரங்கமாக அறைகூவியிருக்கிறார்.

இம்முரண்பாடுகள் யூகோஸ்லாவிய கூட்டமைப்பின் தலைமைக் குழுவிற்குள் மோதலைத் தோற்றுவித்துள்ளன. குரோசியாவைச் சேர்ந்த கூட்டமைப்பின் துணைத் தலைவர் ''ஒவ்வொரு குடியரசும் தனியே படை கட்டுவோம்'' என அறிவிக்க ''அப்படியானால், செர்பியாவும் தனிப்படை அமைக்கும்'' என்று கம்யூனிஸ்டு கட்சி தலைவர் மிலோசெவிக் மிரட்டியதுடன் ஒழுங்கை நிலைநாட்டுமாறு துணை ராணுவத்துக்கு நேரடியாக ஆணையிட்டார். அரசியல் சட்ட நெருக்கடியைத் தோற்றுவித்து தவிர்க்க இயலாமல் ராணுவ ஆட்சியைக் கொண்டு வருவதற்காகவே ஜனாதிபதி ஜோவிக் தனது பதவியைத் திடீரென ராஜினாமா செய்தார். நாட்டின் ஐக்கியத்தைக் காக்க போலி கம்யூனிஸ்டுகள் பெரிதும் நம்பியுள்ள யூகோஸ்லாவிய ராணுவமும் இனரீதியாகப் பிளவுண்டு கிடக்கிறது. மிலோசெவிக்கின் வார்த்தைகளில் சொன்னால் ''யூகோஸ்லாவியா செத்துவிட்டது''

எப்போதெல்லாம் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் முற்றினவோ அப்போதெல்லாம் தேசிய இன முரண்பாடுகளும் கூர்மையடைந்திருக்கின்றன என்பதையே யூகோஸ்லாவியாவின் வரலாறு காட்டுகிறது. 2.3 கோடி மக்கள் தொகையுள்ள நாட்டின் அந்நியக் கடன் 34,200 கோடி ரூபாய். இதன் விளைவாக சமீப காலங்களில் பணவீக்கம் 2000% த்தை எட்டியது. இதைச் சமாளிக்க போலி கம்யூனிஸ்டு அரசு தனது நாட்டை பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்துவிட்டது; சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்கியது; ஏகாதிபத்தியங்களின் நிபந்தனைக்குட்பட்டு சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் சம்பள உயர்வைத் தடை செய்தது. பணவீக்கம், விலை உயர்வு, வாங்கும் சக்தியின்மை ஆகியவை அனைத்தும் சாதாரண உழைக்கும் மக்களை பண்டமாற்றுப் பொருளாதாரத்திற்கே தள்ளியது.

அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சென்ற ஆண்டில் மட்டும் நாடெங்கும் 1300 வேலைநிறுத்தங்கள் நடந்தன. இதனால், பொருளாதாரம் மேலும் நெருக்கடியில் சிக்கியது. தற்போது நூற்றுக்கணக்கான ஆலைகள் மூடப்படும் நிலையை எட்டிவிட்டன. இதனால், வெளியேற்றப்படவுள்ள தொழிலாளர்கள் 6 லட்சம். ஏற்கனவே வேலையின்றி இருக்கும் 10 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுடன் சேர்ந்து வேலையற்றோரின் மொத்த எண்ணிக்கை அபாயகரமான அளவுக்கு அதிகரிக்க விருக்கிறது.

இந்நெருக்கடியை செசெஸ்குவின் பாணியில் சமாளிக்க முயல்கிறது போலிக் கம்யூனிஸ்டு தலைமை. பிராந்தியங்களில் அதிகாரத்தைப் பிடுங்கவும், குவித்துக் கொள்வதற்குமான சட்டத்திருத்தத்தை 1988 இல் கொண்டு வந்தது. ஏற்கனவே இருக்கும் தன்னாட்சி உரிமைகளும் பறிக்கப் பட்டதற்கெதிராக 1989 இல் கொசோவோ பிராந்திய மக்கள் போராடவே, அதை ராணுவத்தைக் கொண்டு அடக்கி 28 பேரைப் படுகொலை செய்தது. தான் விரும்பியவாறே சட்டத்திருத்தத்தை அமுலாக்கியது.

ரசியாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் குருசேவ் பாணி 'சோசலிசத்திற்கு' என்ன நேர்ந்ததோ அதுதான் டிட்டோவின் சோசலிசத்திற்கும் நேர்ந்துள்ளது. உள்நாட்டில் சோசலிசத்தைக் கட்டியமைப்பதிலும், உலகளவில் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதிலும் நேர்முரணான முதலாளித்துவ அணுகுமுறைகளை டிட்டோ முன்வைத்தார். நிலத்தில் தனி உடைமையைத் தொடர்வது, சோசலிசத்தைக் தட்டியெழுப்புவதில் கம்யூனிஸ்டு கட்சியின் முதன்மைப் பாத்திரத்தை மறுப்பது - என்ற டிட்டோவின் அணுகுமுறை சோசலிசத்தின் அடிப்படையையே கேலிக் கூத்தாக்கியது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்காவின் தலைமையில் மேலை ஏகாதிபத்திய நாடுகள் ரசியாவுக்கு எதிராக அணி திரண்டன. சோசலிச நாடுகள் அனைத்தும் ஓரணியில் நின்றபோது டிட்டோ தன்னை இரு முகாம்களுடனும் கூட்டு சேராத தனி நாடாக அறிவித்துக் கொண்டார். ஏகாதிபத்தியங்கள் உலகைப் பங்கு போடவும் சோசலிச நாடுகளை ஒழிக்கவும் முயல்கின்றன என்ற வெளிப்படையான உண்மையை மறுத்து, ஸ்டாலினுடைய வெளிநாட்டுக் கொள்கையால்தான் உலகில் பதட்டநிலை தோன்றுகிறதென்று பொய்க்குற்றம் சாட்டினார். ஏகாதிபத்திய எதிர்ப்பு' சோசலிச நாடுகளின் முகாமிலிருந்து தான் விலகியதுடன் மற்ற மூன்றாம் உலக நாடுகளையும் 'கூட்டு சேராமை' என்ற பெயரில் ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமிலிருந்து திசை திருப்பினார்.

டிட்டோவின் இந்தச் சேவைக்கு கைம்மாறாக அமெரிக்கா டாலர் உதவியை வாரித் தந்தது; ராணுவ தளவாடங்களை கடனில் கொடுத்தது. உலகளவில் சோசலிசத்திற்கும் ஸ்டாலினுக்கும் எதிராக அமெரிக்கா தொடுத்த தாக்குதலில் டிட்டோவே தளபதியாக இருந்தார். போலி கம்யூனிசத்தை உருவாக்கி வளர்ப்பதில் குருசேவ் முதல் அனைத்து வகை திரிபுவாதிகளுக்கும் குருநாதராக இருந்தார்.

தனது தேசிய சர்வதேசியக் கொள்கைகளின் தோல்வியை தனது வாழ்நாளிலேயே டிட்டோ சந்திக்க நேர்ந்தது. சிதறிக் கொண்டிருக்கும் நாட்டை ராணுவ சர்வாதிகாரத்தைக் கொண்டு 'ஒற்றுமைப்படுத்த' அவரது வாரிசுகள் முயன்று கொண்டிருக்கிறார்கள். தனது எதிர்காலம் குறித்த ஏகாதிபத்தியங்களின் முடிவை எதிர்நோக்கி யூகோஸ்லாவியா காத்திருக்கிறது.

● பாலன்

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ்.மதியழகன், 21 பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : ... சென்னை - 600 002

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd.No.TN/MS(S) 344



# இதுதான் இன்றைய இந்தியா

இது நகராட்சிக் குழாய் நீருக்காக காத்திருக்கும் வரிசை அல்ல; காய்ந்து கிடக்கும் காவிரிப் படுகையை நேரில் காண வந்த நடுவர் மன்ற நீதிபதிகளுக்கு தஞ்சை விவசாயிகள் தந்த 'வரவேற்பு'. கண்மாய்க் கரைகளில் காவிரி நீருக்காக காத்து நின்று கால் தளர்ந்தவர்கள், தினசரிகளில் அன்றாடம் மேட்டூர் நீர்மட்டம் பார்த்துப் பெருமூச்செறிந்தவர்கள் இப்போது மீண்டும் நின்றார்கள்.

ஒன்றல்ல, இரண்டல்ல... நடுவர் குழு பயணம் செய்த 500 கி.மீ. தூரமும் மனிதச் சங்கிலி. நடுத்தர, ஏழை விவசாயிகள், நிலமில்லா கூலி விவசாயிகள், பெண்கள், சிறுவர்கள் ஒருவர் பாக்கியில்லை. 'கடல் விவசாயி'களான மீனவர்கள் 20,000 பேர், மாணவர்கள், ஆசிரியர்கள், வியாபாரிகள்... தஞ்சை மாவட்டமே வீதிகளின் இருமருங்கிலும் கை கோர்த்து நின்றது. அவர்களுடைய கைகளில கோரிக்கை அட்டைகள், காலிப் பானைகள், காய்ந்த நெற்கதிர்கள் - முகங்களில் இறுகிப்போன துயரம். செருப்பில்லாத கால்களை சுடுமணலினின்றும் பாதுகாக்க கால்களின் கீழே இலை தழைகள். நீதியின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கிக் காத்து நின்றது வறட்சியில் வாடிய மக்கள் வெள்ளம்.

''வந்திருப்பவர்கள் பெரிய்...ய அதிகாரிகள். அவர்களைப் பார்க்க கந்தலைக் கட்டிக் கொண்டு போகாதே என்றதால் இரவல் வேட்டி கட்டி வந்தேன். எங்களுக்கு ஒரு வேளை சோற்றுக்கு வழி செய்யுங்கள் ஐயா'' என்று நீதிபதிகளிடம் கதறினார் ஒரு விவசாயி. ''நீங்களும் எங்களைக் கைவிட்டு விட்டால் நாங்கள் ஊரை விட்டே ஓட வேண்டியதுதான்'' என்று முறையிட்டார் இன்னொருவர்.



இதோ! வாக்குச் சாவடிகளின் முன் நிற்கும் ஏமாளி மக்களின் வரிசை. அது சென்ற மாதம் நடந்த மனிதச் சங்கிலி. இது அடுத்த மாதம் புதிதாகப் பூட்டிக் கொள்ள விருக்கும் அடிமைச் சங்கிலி. 20 ஆண்டுகளாக எத்தனை சுற்று பேச்சுவார்த்தைகள் - ஆனால் கர்நாடகம் வேண்டாமென்று தள்ளிய தண்ணீர் மட்டுமே மேட்டூருக்கு வந்தது.

காங் - தி.மு.க, ஜனதா - தி.மு.க., காங் - அ.தி.மு.க. ஜனதா - அ.தி.மு.க.... 20 ஆண்டுகளாக எத்தனை இணைப்புகள், கூட்டணிகள் — ஆனால், கங்கை - காவிரி இணைப்பு அங்குலம் கூட முன்னேறவில்லையே. பின் எதற்காக இந்த வரிசை? யாருக்காக இந்தத் தேர்தல்?

ஓட்டுகளை வேட்டுகளாகவும், மனிதச் சங்கிலிகளை முற்றுகை வளையங்களாகவும் மாற்றுவது எப்போது?

படிப்பகம்